(பிரத்தியேக விநியோகத்திற்கு மட்டும்)

விற்பனைக்கில்லை

# எழுச்சி

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

676, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. தொலைபன்னி: 83353

எழுச்சி: 5 ⁑ திருவள்ளுவராண்டு 1997 கார்த்திகை - மார்கழி 1966 நவம்பர் - டிசம்பர் ⁑ குரல் 5 - 6

"கருமமுஞ் சொந்த நலத்தினைச் சிறிதும்
கருதிடா தளித்தலுந் தானே
தருமமாம் என்றும் ஒற்றுமை யோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே
பெருமைகொள் வலியாம் என்றுமே மனத்திற்
பெயர்ந்திடா உறுதிமேற் கொண்டும்,
அருமைசால் சபத மிவைபுரி கின்றேன்
ஆணைக ளனைத்து முற்கொண்டே."

# ஜோஜியா பாஷாக்கள்!

## ஒற்றுமைக்கு மந்திர வித்தையாம்!

### "பாஷா தெப்பார்த்துமெந்துவ" தயாரிக்கும் அட்சரங்கள்!

### தமிழை அழிக்க மற்றுமொரு சதி!

(நமது சிறப்பு நிருபர்)

ஈழத் திருநாட்டிலே தமிழ்மொழிக்கு ஒரு புதிய பேராபத்து உருவாக்கப்பட்டு வருகிறது. அதை உருவாக்கி வருவது அரசகரும மொழித்திணைக்களம். இன்று அரசகரும மொழித்திணைக்களம் தமிழ் மொழியின் கல்லறையாக—சவக்குழியாக—மாறிவிட்டது! அங்கே கல்லறையைக் கட்டியெழுப்பத் தமிழ்த் தூண்கள் பயன்படுகின்றன! கூலிக்குப் பாடிகளின் கூத்தித்தன்மை ஆடுகிறது!

அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் ஆணையிட்டிருக்கிறார் திணைக்களப் பெயரையே மாற்றும்படி! 'அரசாங்க பாஷைப்பகுதி' என்று மாற்றிவிட்டார்! அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்படும் ஏடுகளிற்கூட அச்சேற்றிய பின்னரும் திருத்தங்கள் நடக்கின்றன!

இலங்கை மத்திய வங்கியில் வீசிய புயலின் காரணமாக அரசகரும சொற்தொகுதிகளை (ஏற்கனவே இரண்டுபாகம் வெளிவந்திருந்தது) மீள ஆயும் உத்தரவு பிறந்துள்ளது. தமிழின் வேர்ச் சொற்களிலிருந்து உருவாக்கப்பட்ட நல்ல அழகான செந்தமிழ்ச்சொற்கள் இருந்தன. —அவை யாவும் இருந்த இடம்


களம் சார்ந்த தமிழ்!! காலப் போக்கில் சிங்களமாகவே மாறிவிடும். தமிழ்ச் சட்டம் என்ன செய்யும் இந்த அழிவுப் பாதையைத் தடுக்க? தமிழர்கள்—தமிழ் அரசியல் தலைவர்கள் இதில் விழிப்பாக இல்லாவிட்டால் இந்த அழிவு நிச்சயம் ஏற்பட்டே தீரும்!

ழறிந்த—தமிழ் உணர்ச்சியுள்ள—ஒரு துணை ஆணையாளரின் மேற்பார்வையில்! எமது மொழிக்கு வாழ்வளித்தது சங்க இலக்கியம்! இலக்கணம் வகுத்தது தொல்காப்பியம்! அவை இருக்கவே இருக்கின்றன! எமது மொழிக்குப் புதுமரபு காட்டவேண்டாம். "பாஷா தெப்பார்த்து மெந்துவ!"

"வடசொல்லைத் தமிழ்ச்சொல்
என்று
வழுத்திடும் நரிகட்கெல்லாம்
வடசொல்லும் தெரிவதில்லை
வாழ்வதும் அதனா லல்ல!
வடசொல்லைத் தாய்சொல்
லென்போர்
தமிழால்தான் வாழுகின்றார்
வடசொல்லால் வாழாநாய்கள்
தமிழ்ச்சொல்லைக் குரைப்ப
துண்டோ?"
"வடநாட்டில் தமிழைத்
தாங்கி
வாழ்ந்தவ னில்லை ஆனால்
வடசொல்லைத் தமிழர்
நாட்டில்
வரவேற்க ஆதரிக்க
மடத்தம்பி ரான்கள் உண்டு
வயிற்றுச்சோற் றுக்கே
நாளும்
துடைநடுங் கிகளே ஆன
தாய்தமிழ்ப் புலவ ருண்டு"
—பாரதிதாசன்.

"தமிழி னைப்போல்
உயர்ந்த மொழி
தரணி யெங்கும்
கண்ட தில்லை

### ஆதியிலே (கிறித்தாண்டுக்கு முன்) அரசர் கல்வெட்டில் இந்நாட்டில் கொலுவிருந்த செந்தமிழே-எம் வாழ்வே-இன்றுனக்கு இதுவா நிலை?


Telephone
Director 9291
General Office 9262
Telegrams "STATISTICS" COLOMBO
ජන ලේඛන හා සංඛ්‍යා ලේඛන දෙපාර්තමේන්තුව
குடிசன மதிப்புப் புள்ளிவிபரப் பகுதி
DEPARTMENT OF CENSUS AND STATISTICS
P. O. Box 563
මගේ අංකය: එස්ටී/3/1
Colombo } 1966.11.
ගරු ලේකම්තුමා,
අරසාංග එලුතු විනයාලර් සංගම්
676, ගාලු පාර,
කොළඹ 3.
මහත්මයාණනි,
1966/67 සාමාජික නම් ලැයිස්තුව.
ඔබ විසින් දෙමළ බසින් පමණක් සපයන ලද 1966/67 වර්ෂයේ සාමාජික නම් ලැයිස්තුව රාජ්‍ය භාෂාව වන සිංහලෙන් සකස් කර එවීම සඳහා මේ සමග ආපසු එවමි.
මෙයට, යටහත් සේවක.
ජනලේඛන හා සංඛ්‍යාලේඛන අධ්‍යක්ෂ වෙනුවට.

குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள அதிபர் எழுதிய கடிதம் கூறுவது —.

"தனித் தமிழில் உங்களால் அனுப்பப்பட்ட 1966/67 ஆம் ஆண்டுக்குரிய உங்களது உறுப்பினர் பட்டியலை அரசகரும மொழியான சிங்களத்தில் தயாரித்து அனுப்புவதற்காக இத்துடன் திருப்பி அனுப்புகிறேன்."

# “பாஷா தெப்பார்த்துமெந்துவ” தயாரிக்கும் அட்சரங்கள் !

## தமிழை அழிக்க மற்றுமொரு சதி!

(நமது சிறப்பு நிருபர்)

ஈழத் திருநாட்டிலே தமிழ்மொழிக்கு ஒரு புதிய பேராபத்து உருவாக்கப்பட்டு வருகிறது. அதை உருவாக்கி வருவது அரசகரும மொழித்திணைக்களம். இன்று அரசகரும மொழித்திணைக்களம் தமிழ் மொழியின் கல்லறையாக—சவக்குழியாக—மாறிவிட்டது! அங்கே கல்லறையைக் கட்டியெழுப்பத் தமிழ்த் தூண்கள் பயன்படுகின்றன! கூழுக்குப் பாடிகளின் கூத்தித்தன்மை ஆடுகிறது!

அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் ஆணையிட்டிருக்கிறார் திணைக்களப் பெயரையே மாற்றும்படி! ‘அரசாங்க பாஷைப்பகுதி’ என்று மாற்றிவிட்டார்! அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்படும் ஏடுகளிற்கூட அச்சேற்றிய பின்னரும் திருத்தங்கள் நடக்கின்றன!

இலங்கை மத்திய வங்கியில் வீசிய புயலின் காரணமாக அரசகரும சொற்தொகுதிகளை (ஏற்கனவே இரண்டுபாகம் வெளிவந்திருந்தது) மீள ஆயும் உத்தரவு பிறந்துள்ளது. தமிழின் வேர்ச் சொற்களிலிருந்து உருவாக்கப்பட்ட நல்ல அழகான செந்தமிழ்ச்சொற்கள் இருந்தன. —அவை யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைகின்றன. அதிலும் மேலாக அரசகரும சொற்தொகுதிகள் பாகம் ஒன்றும் இரண்டும் திடீரென மாயமாய் மறைந்துவிட்டன — எங்குமே இன்று வாங்கமுடியாது. நிச்சயமாக அவை விற்று முடியவில்லை என்பது தெரியும்.—அவை மக்கள் கையில் பரவினால் செந்தமிழ் பரவும்—செந்தமிழ் வாழும்! அதைத் தடுக்க அதை ஒழிப்பதே வழி!

சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமக்கிருதம் பொதுவாம்—வேதனைப்படுகிறோம் கேட்க. தமிழின் மூலமே பெரும் பகுதிச் சமக்கிருதச் சொற்களைச் சிங்களம் இரவல் வாங்கியது என்பது வரலாற்று உண்மை. தமிழ்ச் சொற்களே நிறைய உண்டு சிங்களத்தில். இன்று தமிழ் வாழ சிங்களத்தைப் பின்பற்ற வேண்டுமாம்—அதற்காகச் செந்தமிழ்ச் சொற்கள் அழிய வேண்டும் — செந்தமிழ் அழியவேண்டும்! முடிவு ஒருவகைத் தமிழ்! அதுவும் சிங்களம் சார்ந்த தமிழ்!! காலப்போக்கில் சிங்களமாகவே மாறிவிடும். தமிழ்ச் சட்டம் என்ன செய்யும் இந்த அழிவுப் பாதையைத் தடுக்க? தமிழர்கள்—தமிழ் அரசியல் தலைவர்கள் இதில் விழிப்பாக இல்லாவிட்டால் இந்த அழிவு நிச்சயம் ஏற்பட்டே தீரும்!

கேவலம்! இத்தனைக்கும் ஒத்துழைப்பது தமிழர்கள்தான்—ஆம்! அரசகரும மொழித் திணைக்களத்தில் கூலிக்கு மாரடிக்கும் இதயமற்ற தமிழர்கள்! முதுகெலும்பற்ற அந்த முண்டங்கள்தான்! நாயும் வாழும் இந்த ஈன வாழ்வு! வெளியே தமிழ்பற்றி முழக்கம்—விளக்கம்! ஒருசாண் வயிற்றுக்காக உள்ளே தமிழுக்கே குழி தோண்டுகிறார்கள்!! உலக அரங்கில் பவனிவர ஆசை தமிழின் பெயரால்! இங்கே “பாஷாபிமானம்” “பாஷாஜீவன்” பற்றிப் பேசுகிறார்கள் வெட்கம் கெட்ட மானம் தெரியாத, மண்டுகங்கள்! இவர்களையும் தமிழர் என்று எழுதவே கைகூசுகிறது!

இந்தக் கேடுகெட்ட நிலையைத் தவிர்க்கத்தான் நாம் வலியுறுத்துகிறோம் அரசகரும மொழித் திணைக்களத்தில் தமிழுக்குத் தனிப்பிரிவுவேண்டும் என்று—அதுவும் முதுகெலும்புள்ள-தமிழறிந்த—தமிழ் உணர்ச்சியுள்ள—ஒரு துணை ஆணையாளரின் மேற்பார்வையில்! எமது மொழிக்கு வாழ்வளித்தது சங்க இலக்கியம்! இலக்கணம் வகுத்தது தொல்காப்பியம்! அவை இருக்கவே இருக்கின்றன! எமது மொழிக்குப் புதுமரபு காட்டவேண்டாம். “பாஷா தெப்பார்த்து மெந்துவ!”

“வடசொல்லைத் தமிழ்ச்சொல் என்று
வழுத்திடும் நரிகட்கெல்லாம்
வடசொல்லும் தெரிவதில்லை
வாழ்வதும் அதனு லல்ல!
வடசொல்லைத் தாய்சொல் லென்போர்
தமிழால்தான் வாழுகின்றார்
வடசொல்லால் வாழாநாய்கள்
தமிழ்ச்சொல்லைக் குரைப்ப துண்டோ?”
“வடநாட்டில் தமிழைத் தாங்கி
வாழ்ந்தவ னில்லை ஆனால்
வடசொல்லைத் தமிழர் நாட்டில்
வரவேற்க ஆதரிக்க
மடத்தம்பி ரான்கள் உண்டு
வயிற்றுச்சோற் றுக்கே நாளும்
துடைநடுங் கிகளே ஆன
தாய்தமிழ்ப் புலவ ருண்டு”

—பாரதிதாசன்.

“தமிழி னைப்போல்
உயர்ந்த மொழி
தரணி யெங்கும்
கண்ட தில்லை
தமிழ னைப்போல்
மொழிக்கொ லையில்
தலை சிறந்தார்
எவரு மில்லை.”


—வி. க.

## நாட் காட்டி!

ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் இந்த ஆண்டு புதிய முறையில் கனத்த (போயா) நாட்களை ஒரே நிரையில் காட்டும் நாட் காட்டியை இலவசமாகக் கொடுக்கிறோம்.

மேலதிகமாக நாட்காட்டி வேண்டுவோர் ஒவ்வொன்றிற்கும் சதம் -/10 வீதம் காசு கொடுத்துப் பெற்றுக் கொள்ள முடியும். தபால் மூலம் எடுக்க விரும்புவோர் தயவுசெய்து முகவரியிட்ட முத்திரையொட்டிய உறைகளையும் நாட்காட்டிக்குரிய பணத்தை முத்திரையாகவோ வேறு வழியாகவேனும் அனுப்பினால், அனுப்பி வைக்கப்படும்.

## விருந்த செந்தமிழே-எம் வாழ்வே-இன்றுனக்கு இதுவா நிலை?


Telephone
Telegrams
"STATISTICS"
COLOMBO
DEPARTMENT OF CENSUS AND STATISTICS
P. O. Box 563
Colombo } 1966.11. 7
676,
1966/67
1966/67

குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள அதிபர் எழுதிய கடிதம் கூறுவது —

“தனித் தமிழில் உங்களால் அனுப்பப்பட்ட 1966/67 ஆம் ஆண்டுக்குரிய உங்களது உறுப்பினர் பட்டியலை அரசகரும மொழியான சிங்களத்தில் தயாரித்து அனுப்புவதற்காக இத்துடன் திருப்பி அனுப்புகிறேன்.”

* * *

My No. F/PE. 3/TU.
Department of Agriculture,
P. E. Branch, Peradeniya,
16 th October, 1966.

Hony. General Treasurer,
Arasanka Eluthuvinaignar Sankam,
676, Galle Road,
Colombo-3.

Dear Sir,

**Union Subscriptions — October, 1966.**

2. I find that your subscription list for October, 1966 has been furnished in Tamil while you had sent earlier statements in English. The officer attending to this subject is not proficient in Tamil and I shall therefore thank you to furnish your statements in English as in the past.

3. ..........

yours faithfully,
Sgd.
for Director of Agriculture.

7-ம் பக்கம் பார்க்க

# சேர். பொன்னம்பலம் இராமநாதன்

சேர் இராமநாதன் அவர்கள் தம் வாழ் நாட்களில் ஆற்றிய மாபெருந் தொண்டுகளைப் பற்றியும், அடைந்த மகத்தான வெற்றிகளைப் பற்றியும் எண்ணிப் பார்ப்பது மகிழ்ச்சி தரும் மரபாகவே இன்று அமைந்து விட்டது. இத்தகைய ஒரு வைபவத்தின் போது, அன்று ஆள்பதி நாயகமாக விளங்கிய சேர். ஹேபேட் ஸ்ரான்லி அவர்கள், ''நான் ஓர் இலங்கையரெனில், உண்மையில், சேர் பொன்னம்பலம் இராமநாதனுல் பெருமையடைவேன். அன்னுரின் வாழ்க்கை மிக உன்னதமானது. ஒரு மனிதன் வாழ்க்கையின் பல்வேறு துறைகளையும் நாடி, அவ்வாறு நாடப்பெற்ற ஒவ்வொரு துறையிலும் ஒப்புவமையப்பெற்ற வெற்றிகளைப் பெற்ற நிகழ்ச்சிகள் ஒருசிலவே வரலாற்றில் உண்டு. என்பது என் திண்ணம்'' எனக் குறிப்பிட்டார்கள்.

அரசியல் மேதையாக, கற்றறிந்தாராக, தத்துவ ஞானியாக, மதாபிமானியாக, தேசபக்தராக, கொடைவள்ளலாக, கல்வியை நெறிப்படுத்துபவராக, சட்ட வல்லுனராக இன்னும் நாட்டின் வழிபடும் தெய்வமாக இவ்வாறு பல்வேறு துறைகளிலும் ஈடு இணையற்று விளங்கிய சேர் இராமநாதன் அவர்கள், 1851-ம் ஆண்டு கேற் முதலியார் பொன்னம்பலம் அவர்களின் இரண்டாவது மகனுகத் தோன்றினுர். இராமநாதன் தன் ஆரம்ப காலகல்வியைத், தற்பொழுது றேயல் கல்லூரியென அழைக்கப்படும் அன்றைய மகாராணிக் கல்விக் கழகத்தில் (Queen's Academy) கலாநிதி போக் அவர்களிடம் பெற்றுர். பின்னர் சென்னை இராஜதானிக் கல்லூரியில் உயர் கல்வியைக் கற்றுத் தேர்ந்தார். இவர் தமது மேற்படிப்பைச் சென்னையில் முடித்துவிட்டு இலங்கை திரும்பியதும், இவரின் மாமனுர் சேர் முத்துக்குமாரசாமி என்பவர் அக்காலத்தின் நாட்டின் தலைசிறந்த சட்ட மேதையாகவும், அன்றைய சட்டத்துறை நாயகமாகவும் விளங்கிய சேர். றிச்சார்ட் மோகன் அவர்களிடம் சட்டத் தொழில் பயிலுவதற்கு இவரைச் சேர்ப்பித்தார். தமது இருபத்திரண்டாவது வயதில் கொழும்பு நீதிமன்றத்தில் சட்டத் தொழிலே ஆரம்பித்தார். ஆரம்பித்த சொற்ப காலத்திற்குள்ளேயே தனது விவா

இலண்டனில் உள்ள குடியேற்ற அலுவலகத்தின் அழைப்பின் பேரிலே 1893-ம் ஆண்டு சட்ட அறிஞர் நாயகம் பதவியை ஏற்றுர். அத்துடன் சட்டத்துறை நாயகம் ஆகவும் நெடுங்காலம் பணியாற்றினுர். இப்பதவிகளை வகிக்கும் காலத்தில், ஒரு அரசாங்க ஊழியனிடம் இருக்க வேண்டிய கரையிறந்த நேர்மைக்கும் வரையிறந்த ஆற்றலுக்தும் இருப்பிடமாகவே திகழ்ந்தார். சேர் இராமநாதன் அவர்கள் சட்ட அறிஞர் நாயகப் பதவியில் மாட்டுவண்டியில் மூட்டப்பட்டுள்ள ஓர் பந்தய ஓட்டக்குதிரை என்று ஆள்பதிநாயகம் சேர் வெஸ்றிட்ச்வே ஒரு முறை தறிப்பிட்டுள்ளார். 1905-ம் ஆண்டு ஓய்வு பெற்றபின்னர், பலதடவைகளாக அமெரிக்க நாட்டு மக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று பல சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்காக அந்நாட்டிற்தப் பயணமானுர். பல கோடி மக்களின் இருண்ட இதயங்களில், புத்தொளியும் புதுத் தென்பும் ஏற்றிய வித்தகனுகவும் அறிவுப் பேராருகவும், மதநெறி புகட்டும் பேராசானுகவும் அங்கு போற்றிப் புகழப்பட்டார்.

அமெரிக்காவில் இருந்து வீடு திரும்பியபோது அவரின் உள்ளம், அரசியல் வாழ்வை முற்றிலாகத் துறந்து, மீதி நாட்களை, மத, இலக்கிய, கல்விசம்பந்தமான காரியங்களிலேய ஈடுபடவேண்டுமென விரும்பியது. அதற்கிணங்க, இந்து மகளிர் கல்விக் கூடத்தைத் தாபிக்கும் வேலையில் மூழ்கி நிற்கும்போது, நாடு அவரின் சேவையை மீண்டும் ஒருமுறை நாடியது. நாட்டுத்தலைவர்களின் வேண்டுகோளை அவரால் புறக்கணிக்க முடியவில்லை. நாட்டின் ஒருமுகப்பட்ட சம்மதத்துடன் படித்த இலங்கையர்களின் பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினராக 1911-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கள் வாக்களிப்பு முறையால் சட்ட உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் இலங்கையர் என்ற பெருமை இவரையே சாரும். அங்கு, 1930-ம் ஆண்டில் இவர் இவ்வுலகை விட்டு நீங்கும்வரை, தம் மக்களுக்கு அயராத ஆர்வத்தோடுந் தளராத ஊக்கத்தோடும் பணிபுரிந்தார்.

எமது தேசிய தாபனங்களைச்

இலங்கையின் ஒவ்வொரு சமூகமும், தத்தம் இன்னல்களையும், பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு இவரின் உதவியையே நாடியது. சமுதாய வாதம், இனவெறி, குழுவெறி, மற்றும் இன்னோரன்ன விரும்பப்படாத துவேஷ மனப்பான்மைகள் கிஞ்சித்தும் இல்லாத ஒரு பெருந்தகையாக விளங்கினுர் சேர். பொன். இராமநாதன் அவர்கள்.



தன்னுடைய மதக்கோட்பாடுகளின் போதனைக்கேற்ப, மக்கள் யாவரும் உடன் பிறந்த சகோதரர்கள் போல ஒன்றுபட்டு ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டுமென வற்புறுத்தினுர். தன்னுயிர்போல் மன்னுயிரையும் மதித்த கருணைக்கடல் அவர். ''இன, மத, வர்க்க வேறுபாடின்றி எப்பொழுது எம்மக்கள் வாழ்கின்ருர்களோ, அந்நாளே இலங்கையின் மகிழ்ச்சி மிக்க மரண்புடை நாள்'' என்று ஒருமுறை அவர் கூறியுள்ளார். நாட்டின் அரசியலை வழிநடத்திச்சென்ற அரைநூற்ருண்டிற்தம் அதிகமான காலத்தில், நாட்டில் உள்ள பல்வேறு இன மக்களையும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடனும் பிணைப்புடனும் வாழச் செய்தார்.

தேசிய விடுதலைக்காகவும், நாட்டுத் தன்னுட்சிக்காகவும், மற்றவரிலும் பார்க்கக்கூடிய ஆர்வத்துடனும், குன்ருத வீரத்துடனும் போராடியவர் இவர். மக்கள் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கும் நன்மை

அரசியல் ஞானம் மிகுந்த அறிவுப் பொக்கிஷங்களாக விளங்குகின்றன. தொனமூர் யாப்பு ஏற்பட்டதும் சுயாட்சிக்கு வழி பிறந்ததும் இவற்றின் பயன் என்று கூறினுல் மிகையாகாது. தொனமூர் யாப்புச் சீர்திருத்தங்களிற் சில அம்சங்கள் இவரின் விருப்பத்திற்கு முரணுக இருந்தாலும் ஜனநாயக சுதந்திரம், தேசிய இறைமை என்பவற்றை நோக்கிச் சென்ற பாதையில் ஒரு மாபெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினுர் என்றே கருத வேண்டும்.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் புத்த மதமும், புத்த மதத் தாபனங்களும் மனக் கவலையளிக்கும் வகையில புறக்கணிக்கப்பட்டு வந்தன. இது இராமநாதனின் மனத்தை வாட்டியதுடன், ஆத்திரத்தையும் கிளப்பியது. எனவே, புத்த மதத்தையும், தாபனங்களையும் பாதுகாப்பதென உறுதி பூண்டு, செயலிலும் விரைந்தார். அந்நிய நாட்டு எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து அவர்களின் பராமுகம் இனவொதுக்கல் மத அடக்கம், நிலையூன்றிய பற்றுக்கள் போன்ற கொள்கைகளை எதிர்த்துக் கடும் போர் தொடுத்தார். [Buddhist Temporalities Bill] பௌத்த சொத்துரிமை மசோதா மீது அவர் ஆற்றிய உரை மகத்தானது. ''புத்த குருமார்கள் உண்மையில் வழிபாட்டிற்குரியவர்கள். எனவே தூய்மையின் இருப்பிடமாகத் திகழுகின்றனர். அவ்வாறிருக்க, பிரித்தானிய ஆட்சி அவர்களின் பெரும்பாலோரை கீழ்நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.'' இவ்வாறு ஆள்ப்திநாயகம் கோடன் பிரபுவுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர். பொன். இராமநாதன் கூறினுர். சரசாவி சந்தரேசா என்னும் சிங்களச் செய்தித் தாள், 1889-ம் ஆண்டு மே இருபத்தெட்டாம் திகதி இதழில் குறிப்பிட்டதாவது ''பௌத்தர்கள் அனைவரும் திரு. இராமநாதன் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். வெசாக் விடுமுறை பற்றி அவர் எடுத்த ஆர்வம், [Buddhist Temporalities Bill] பௌத்த சொத்துரிமை மசோதா, பாலிக் கல்லூரி பௌத்த மாணவர்களுக்கு அவரளித்த ஆறுதல் வார்த்தைகள், தத்துவக் கழகம் [Theosophical Society] மற்றும் பௌத்த மதத்திற்கு ஆற்றிய ஏனைய பணிகள் என்

நெறிப்படுத்துவாரின்றி இருளில் அகப்பட்டுத் தத்தளிக்கும் இனமாகவே இருக்கும்.''

கல்வித்துறை முன்னேற்றத்திற்கு அவர் புரிந்த பணிகள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட்டுள்ளன. இவர் ஒரு கல்விச் சிந்தனையாளர். எமது கல்வி முறைக்குப் புதிய தூண்டுதல்களையும் தேசிய அமைப்பையும் கொடுத்தவர். இவர் ஏராளமான கல்விக் கூடங்களை அமைத்தவர். அவற்றுள் இரண்டு பெரிய தாபனங்களாக விளங்குகின்றன. இவை அப் பெரியாரின் அழியாச் சின்னமாக நின்று நிலவுகின்றன. மேற்கத்திய கல்வி முறையும், பண்பாடும், பாரம்பரியமும் எம்மவற்றை அழித்தொழிக்கும் நிலையில் இருந்த காலத்தில், அவர் ஓர் எச்சரிக்கை விடுத்தார். நாட்டு மக்களின் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் பேணி வளர்க்கக் கூடிய கல்வி இல்லாவிட்டால், அதன் நோக்கமே தோல்வியடைந்து விடுமென அவர் தன் நாட்டு மக்களுக்குக் கூறினுர். உண்மையில், இலங்கைப் பல்கலைக் கழக இயக்கத்தின் தந்தை அவர் என்ருல் அதில் தவறில்லை. அன்னுரின் முயற்சியால், முதல் பயனுக 1921-ம் ஆண்டில் பல்கலைக் கழகக் கல்லூரி நிறுவப்பட்டது. பின்னர் அது இலங்கைப் பல்கலைக் கழகமாகப் பரிணமித்தது. ஆனுல், தனியொரு பல்கலைக் கழகக் கருத்தை அவர் முற்றிலாக எதிர்த்தார். ''இலங்கை முழுவதற்கும் ஒரேயொரு பல்கலைக் கழகம் போதும் என்ற கருத்து மிகவும் தவருனது. எமக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் தேவை. அவை மக்கள் நிறைந்து வாழும் நாட்டின் முக்கிய மையங்களில் அமைக்கப்பட வேண்டும்'' என அவர் கூறியுள்ளார். பல்கலைக் கழகத்திலிருந்து பிரவாகிக்கும் கலாச்சார ஊற்றுக்கள் நாடெங்கணும் பரவி நன்மை பயக்க வேண்டும். ஒரு பகுதியினருக்கு மட்டும் கிடைத்தால் போதாது என்று கருதினுர். மாணவர்களுக்கு முறையான, உயர்தரமான போதனைகளையும், நல்ல இருப்பிட வசதிகளையும் வழங்க வழி வகுத்தார். இத்தகைய வாய்ப்புக்கள் இல்லாத காலம் அது.

நம் மக்கள், தங்கள் ஆத்மீக பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் மறந்து, வேற்று நாட்டினரின் பழக்க

## திரு. மு. வயித்திலிங்கம்

*முதல்வர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி.*


அரசியல் மேதையாக, கற்றறிந்தாராக, தத்துவ ஞானியாக, மதாபிமானியாக, தேசபக்தராக, கொடைவள்ளலாக, கல்வியை நெறிப்படுத்துபவராக, சட்ட வல்லுனராக இன்னும் நாட்டின் வழிபடும் தெய்வமாக இவ்வாறு பல்வேறு துறைகளிலும் ஈடு இணையற்று விளங்கிய சேர் இராமநாதன் அவர்கள், 1851-ம் ஆண்டு கேற் முதலியார் பொன்னம்பலம் அவர்களின் இரண்டாவது மகனுகத் தோன்றினுர். இராமநாதன் தன் ஆரம்ப காலகல்வியைத், தற்பொழுது றேயல் கல்லூரியென அழைக்கப்படும் அன்றைய மகாராணிக் கல்விக் கழகத்தில் (Queen's Academy) கலாநிதி போக் அவர்களிடம் பெற்ருர். பின்னர் சென்னை இராஜதானிக் கல்லூரியில் உயர் கல்வியைக் கற்றுத் தேர்ந்தார். இவர் தமது மேற்படிப்பைச் சென்னையில் முடித்துவிட்டு இலங்கை திரும்பியதும், இவரின் மாமனுர் சேர் முத்துக்குமாரசாமி என்பவர் அக்காலத்தின் நாட்டின் தலைசிறந்த சட்ட மேதையாகவும், அன்றைய சட்டத்துறை நாயகமாகவும் விளங்கிய சேர். றிச்சார்ட் மோகன் அவர்களிடம் சட்டத் தொழில் பயிலுவதற்கு இவரைச் சேர்ப்பித்தார். தமது இருபத்திரண்டாவது வயதில் கொழும்பு நீதிமன்றத்தில் சட்டத் தொழிலே ஆரம்பித்தார். ஆரம்பித்த சொற்ப காலத்திற்குள்ளேயே தனது விவாதத்திறனுல், ஆண்டாலும், அனுபவத்தினுலும் முதிர்ந்த பல சட்ட மேதைகளை மடக்கி வெற்றிவாகை சூடினுர். தமது இருபத்தெட்டாவது வயதில், நாட்டின் சட்டமன்ற உறுப்பினரானுர். தன் மாமனுர் விட்டுச் சென்ற இடத்தை வெகு சிறப்புடன் அணி செய்தார். தன் சொற்களை களின் விற்பன்மையாலும், சூழ்ந்த அரசியல் நுண்ணறிவினுலும், அஞ்சாத உணர்ச்சியினுலும், மக்களின் பிரச்சினைகளைப் பற்றிக் கேட்பார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மையாலும் ஆளுங் குழுவினரையும் அவரோடொத்தவர்களையும் அதிர்ச்சியடையச் செய்தார். இவற்றின் பயனுக தன்னிலும் பார்க்க ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள் இருக்க, அவர்களுக்கும் மேலாக வெகுவிரைவில் சிரேட்ட உத்தியோகப் பற்றற்ற உறுப்பினராக உயர்த்தப்பட்டார். எனவே, தனது அரசியல் வாழ்வின் ஆரம்பத்திலேயே அவர் தலைசிறந்த அரசியல் மேதையின் இடத்தைப் பிடித்து விட்டார்.

காக அந்நாட்டிற்குப் பயணமானுர். பல கோடி மக்களின் இருண்ட இதயங்களில், புத்தொளியும் புதுத்தென்பும் ஏற்றிய வித்தகனுகவும் அறிவுப் பேராருகவும், மதநெறி புகட்டும் பேராசானுகவும் அங்கு போற்றிப் புகழப்பட்டார்.

அமெரிக்காவில் இருந்து வீடு திரும்பியபோது அவரின் உள்ளம், அரசியல் வாழ்வை முற்றிலாகத் துறந்து, மீதி நாட்களை, மத, இலக்கிய, கல்விசம்பந்தமான காரியங்களிலேய ஈடுபடவேண்டுமென விரும்பியது. அதற்கிணங்க, இந்து மகளிர் கல்விக் கூடத்தைத் தாபிக்கும் வேலையில் மூழ்கி நிற்கும்போது, நாடு அவரின் சேவையை மீண்டும் ஒருமுறை நாடியது. நாட்டுத்தலைவர்களின் வேண்டுகோளை அவரால் புறக்கணிக்க முடியவில்லை. நாட்டின் ஒருமுகப்பட்ட சம்மதத்துடன் படித்த இலங்கையர்களின் பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினராக 1911-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கள் வாக்களிப்பு முறையால் சட்ட உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் இலங்கையர் என்ற பெருமை இவரையே சாரும். அங்கு, 1930-ம் ஆண்டில் இவர் இவ்வுலகை விட்டு நீங்கும்வரை, தம் மக்களுக்கு அயராத ஆர்வத்தோடுந் தளராத ஊக்கத்தோடும் பணிபுரிந்தார்.

எமது தேசிய தாபனங்களைச் செப்பனிடும் பணிக்குத்தன் வாழ்நாட்களை முழுக்க, முழுக்க அர்ப்பணித்த ஒரு பெருந்தகையின் சிறப்பியல்புகளை இதுபோன்ற ஒரு சுருக்கமான கட்டுரையில் எடுத்தியம்புவது இயலாததொன்ருதும். எனவே, அவரின் உயர்ந்த மனிதப் பண்புகள் அரசியல் மேதை என்ற முறையில் அவரின் கொள்கைகள் என்பவற்றின் அடிப்படை இயல்புகள் சிலவற்றை ஓரளவிற்கு தொட்டுச் செல்வதாலேயே இட்ட பணியை நிறைவேற்ற முடியும்.

தேசிய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வித்திட்டு வளர்த்த பெருமகன் இவர். இவர் செய்த ஆக்கப் பணிகள் எல்லாவற்றுக்கும் சிகரம் போன்று விளங்குவது. 1930-ல் இவர் மறையும் வரை, நமது தேசிய வாழ்வின் பெரும் அரணுகவும், நாட்டின் பெருமை மிகு மூலாதாரமாகவும், இது நின்று நிலவியது.



தன்னுடைய மதக்கோட்பாடுகளின் போதனைக்கேற்ப, மக்கள் யாவரும் உடன் பிறந்த சகோதரர்கள் போல ஒன்றுபட்டு ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டுமென வற்புறுத்தினுர். தன்னுயிர்போல் மன்னுயிரையும் மதித்த ''கருணைக்கடல் அவர். ''இன, மத, வர்க்க வேறுபாடின்றி எப்பொழுது எம்மக்கள் வாழ்கின்ருர்களோ, அந்நாளே இலங்கையின் மகிழ்ச்சி மிக்க மரண்புடை நாள்'' என்று ஒருமுறை அவர் கூறியுள்ளார். நாட்டின் அரசியலை வழிநடத்திச்சென்ற அரைநூற்ருண்டிற்கும் அதிகமான காலத்தில், நாட்டில் உள்ள பல்வேறு இன மக்களையும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடனும் பிணைப்புடனும் வாழச் செய்தார்.

தேசிய விடுதலைக்காகவும், நாட்டுத் தன்னுட்சிக்காகவும், மற்றவரிலும் பார்க்கக்கூடிய ஆர்வத்துடனும், குன்ருத வீரத்துடனும் போராடியவர் இவர். மக்கள் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கும் நன்மை பெறுவதற்கும் சுதந்திரம் மிக அவசியம் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். தமது குன்ருத அறிவுச் செல்வத்தினுலும், தீர்க்கதரிசச் சிந்தனை ஆற்றலாலும் சுயாட்சிக்காக அயராது சலியாது உழைத்தமையாலும் சொல்வன்மையாலும, எளிய வாழ்க்கை முறையினுலும், ஏற்றமிகு தேசியப் பற்றினுலும் அன்று ஆதிக்கம் செலுத்திய ஆள்வோரின் உள்ளங்களில் தன்னை நன்ருகப் பதித்துக்கொண்டார். இவர் தனது சட்ட மன்ற உறுப்பினர் வாழ்வின் ஆரம்ப காலத்தில், இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் யாப்புச் சீர்திருத்தம் பற்றி சமர்ப்பித்த முறையீடுகள்; இதே விடயம் பற்றிச் சட்ட மன்றத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள்

ஙங்களையும் பாதுகாப்பதென உறுதி பூண்டு, செயலிலும் விரைந்தார். அந்நிய நாட்டு எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து அவர்களின் பராமுகம் இனவொதுக்கல் மத அடக்கம், நிலையூன்றிய பற்றுக்கள் போன்ற கொள்கைகளை எதிர்த்துக் கடும் போர் தொடுத்தார். [Buddhist Temporalities Bill] பௌத்த சொத்துரிமை மசோதா மீது அவர் ஆற்றிய உரை மகத்தானது. ''புத்த குருமார்கள் உண்மையில் வழிபாட்டிற்குரியவர்கள். எனவே தூய்மையின் இருப்பிடமாகத் திகழுகின்றனர். அவ்வாறிருக்க, பிரித்தானிய ஆட்சி அவர்களின் பெரும்பாலோரை கீழ்நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.'' இவ்வாறு ஆள்பதி நாயகம் கோடன் பிரபுவுக்கும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் சேர். பொன். இராமநாதன் கூறினுர். சரசாவி சந்தரேசா என்னும் சிங்களச் செய்தித் தாள், 1889-ம் ஆண்டு மே இருபத்தெட்டாம் திகதி இதழில் குறிப்பிட்டதாவது ''பௌத்தர்கள் அனைவரும் திரு. இராமநாதன் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். வெசாக் விடுமுறை பற்றி அவர் எடுத்த ஆர்வம், [Buddhist Temporalities Bill] பௌத்த சொத்துரிமை மசோதா, பாலிக் கல்லூரி பௌத்த மாணவர்களுக்கு அவரளித்த ஆறுதல் வார்த்தைகள், தத்துவக் கழகம் [Theosophical Society] மற்றும் பௌத்த மதத்திற்கு ஆற்றிய ஏனைய பணிகள் என்பன அன்னுர், இலங்கைப் பௌத்தர்களின் உள்ளங்களில் நீங்காமல் நிலைபெறுவதற்கு உறுதுணையாய் நின்றன.

1915-ம் ஆண்டுக் குழப்பங்களும் அவரின் தீரச் செயல்களும் தற்காலச் சரித்திரம் அறிந்ததே. எனவே விரித்துக் கூற வேண்டியதில்லை. ஆயினும் 1915-ம் ஆண்டு ஒக்டோபர் 21-ல் கல்கத்தாவிலிருந்து மதிப்புமிக்க அனகாரிக தர்மபாலா அவர்கள் எழுதிய கடிதத்தில் இருந்து சில பகுதிகளைக் கூற ஆசைப்படுகிறேன். ''இலங்கையிலிருந்து தங்களை எடுத்துச் செல்லப்படும் தினத்தில் இருந்து, புறக்கணிக்கப்பட்டு, அல்லற்படும் ஏழை இலங்கையரை அரவணைத்து, ஆறுதல் கூறி வழி நடத்திச் செல்ல எவருமே இருக்க மாட்டார்கள். இன்னற்படும் சிங்கள மக்கள் பாதுகாப்பின்றி

யத்தையும் பேணி வளர்க்கக் கூடிய கல்வி இல்லாவிட்டால், அதன் நோக்கமே தோல்வியடைந்து விடுமென அவர் தன் நாட்டு மக்களுக்குக் கூறினுர். உண்மையில், இலங்கைப் பல்கலைக் கழக இயக்கத்தின் தந்தை அவர் என்ருல் அதில் தவறில்லை. அன்னுரின் முயற்சியால், முதல் பயனுக 1921-ம் ஆண்டில் பல்கலைக் கழகக் கல்லூரி நிறுவப்பட்டது. பின்னர் அது இலங்கைப் பல்கலைக் கழகமாகப் பரிணமித்தது. ஆனுல், தனியொரு பல்கலைக் கழகக் கருத்தை அவர் முற்றிலாக எதிர்த்தார். ''இலங்கை முழுவதற்கும் ஒரேயொரு பல்கலைக் கழகம் போதும் என்ற கருத்து மிகவும் தவருனது. எமக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் தேவை. அவை மக்கள் நிறைந்து வாழும் நாட்டின் முக்கிய மையங்களில் அமைக்கப்பட வேண்டும்'' என அவர் கூறியுள்ளார். பல்கலைக் கழகத்திலிருந்து பிரவாகிக்கும் கலாச்சார ஊற்றுக்கள் நாடெங்கணும் பரவி நன்மை பயக்க வேண்டும். ஒரு பகுதியினருக்கு மட்டும் கிடைத்தால் போதாது என்று கருதினுர். மாணவர்களுக்கு முறையான, உயர்தரமான போதனைகளையும், நல்ல இருப்பிட வசதிகளையும் வழங்க வழி வகுத்தார். இத்தகைய வாய்ப்புக்கள் இல்லாத காலம் அது.

நம் மக்கள், தங்கள் ஆத்மீக பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் மறந்து, வேற்று நாட்டினரின் பழக்க வழக்கங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவார்களேயெனில் அழிவு நிச்சயம் என்ற உண்மையைத் தன் தீர்க்கதரிசனக் கண்களால் கண்டு கொண்ட பெரும் தேசியவாதி அவர். தங்கள் தேசிய தாபனங்களிலும், சிறப்பு மிக்கதும், கீர்த்தி வாய்ந்ததுமான பாரம்பரியங்களிலும், மக்களைப் பெருமை கொள்ளச் செய்வதற்கு, தைரியத்தோடும், தளராத மனத் திட்பத்தோடும் பாடுபட்டார். இத்தகைய பண்பாடுகளைப் பேணிக் காத்து, வளர்த்துப், பெருக்கிப் பிற்சந்ததியினருக்குக் கொடுக்கும் பொறுப்பினையும் பற்றி மக்களுக்கு வற்புறுத்தினுர். அவர் ஒரு முதன்மையான கொள்கைவாதி. ஆனுல் அவரின் கொள்கைவாதம் செயற்படுத்தக் கூடியதாகவும் நடைமுறைக் கொத்ததாகவும் இருந்தது. அவர் ஒரு செயல் வீரர் என்ருல் மிகையாகாது. அரை நூற்ருண்டிற்கும் மேலாக நாட்டின் அரங்கில் பிரதம நடிகராக விளங்கியவர். அரசியல் மேதையாக, நிர்வாக விற்பன்னராக, தேசாபிமானி

(7-ம் பக்கம் பார்க்க)

## ஆலோடு வேல்என் றறிந்திருந்தும் ஆளவந்தார்

# நெறி பிறழா நல்வாழ்க்கை

பேராசிரியர்:

**மு. வரதராசன்**

(தமிழ்ப் பேராசிரியர்: சென்னைப் பல்கலைக் கழகம்.)

ஒரு நெறி வகுத்து அதன்படி உறுதியாக நின்று வாழ்வது வரம்பு கோலிய நல்வாழ்க்கையாகும். அப்படி வாழ்வது வெற்றிக்கு வழியாகும் என்று முன்னோர்கள் நம்பினார்கள். ஆனால் இந்த நூற்றாண்டில் அவ்வாறு நெறி வகுத்து வாழ்வோர் மிகமிகச் சிறுபான்மையோர் ஆகி விட்டார்கள். அது வெற்றிக்கு வழி என்று நம்பும் நம்பிக்கையும் வர வரக் குறைந்து விட்டது. நெறி இல்லாமல் வாழ்பவர்கள் பலதுறையிலும் முன்னேறுவதற்கு இன்றைய சமுதாய நிலை இடம் தருகிறது. சிறப்பாக அரசியலில் நெறியோடு வாழ்வது தேவையற்றதாகி விட்டது. அரசியலே மற்றைய எல்லாத் துறைகளுக்கும் உயிர்போன்ற தலைமையான துறையாக இக்காலத்தில் விளங்குகிறது. அரசியலில் நெறிக்கு மதிப்பில்லாமல் போகவே, மற்றத்துறைகளும் அதே நிலைமையில் வளர்ந்து வருகின்றன.

இத்தகைய மாறுதலான காலத்திலும் நெறியோடு வாழ்வோர் சிலர் உள்ளனர். அவர்களை அங்கும் இங்கும் காணமுடிகிறது. இந்த நூற்றாண்டில் அரசியல் துறையிலும் அத்



தகைய பெருமக்கள் சிலர் நல்ல கொள்கைகளைப் போற்றி உறுதியாக வாழ்ந்தனர் என்றால், அது வியத்தற்குரிய பெருமை உடையதாகும். இந்தியாவின் உரிமைப் போராட்டத்தை நடத்திய ஒப்பற்ற தலைவர் காந்தியடிகள் உலகம் புகழும் அறவோராக விளங்கினார். அவருடைய நெறியான தூய வாழ்க்கை உலக வரலாற்றில் ஒளியோடு விளங்கும் சிறந்த ஏடு ஆகும். இந்தியாவில் அவருடைய தலைமையால் பண்பட்ட அரசியல் தலைவர்கள் அங்கும் இங்குமாகச் சிற்சிலர் காணப்படுகின்றனர். தமிழ் நாட்டிற்குப் பெருமை தரத்தக்க வகையில் நெறியான வாழ்க்கை வாழ்ந்து கொள்கைகளில் உறுதி பூண்டிருந்த சான்றோர் ஒருவர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் ஆவார்.

திரு. வி. க. அவர்களுக்குத் தமிழ் நாட்டு அரசியலில் பெருமையான இடம் இருந்தது. 1925-27 ஆண்டுகளில் அவர் காங்கிரஸ்கட்சியின் செல்வாக்குள்ள தலைவர்கள் நால்வரில் ஒருவராக விளங்கினார். ஓர் ஆண்டு மாநிலக் காங்கிரஸ் தலைவராகவும் திகழ்ந்தார். ஆனால், அவருடைய அரசியல் தொண்டும் தலைமையும் காங்கிரஸ் கட்சியளவில் நின்றுவிடவில்லை. தொழிலாளர் கட்சியில் அவருடைய தொண்டும் தலைமையும் வளர்ந்தன; சிறப்பிடம் பெற்றன. காங்கிரசை விட்டு விலகிய காலத்திலும் அவர் தொழிலாளர் சங்கத்தை விட்டு விலகியதில்லை.

இறுதி நாள் வரையில் அதனோடு தொடர்பு வைத்திருந்தார். ஏனெனில், அது அவர் ஈன்ற குழந்தை. இந்தியாவிலேயே முதல் முதல் தொழிலாளர் சங்கத்தை ஏற்படுத்தித் தொழிலாளர் இயக்கத்தை நடத்திய பெருமை வாடியா என்னும் அறிஞர்க்கும், திரு. வி. க. என்னும் சான்றோர்க்கும் கிடைத்தது. இக்காரணங்களால் திரு. வி. க. அரசியல் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். ஆயினும் நெறி தவறவில்லை; கொள்கை நெகிழவில்லை. இறுதிவரையில் தூய அறவோராக வாழ்ந்தார். அவருடைய வாழ்க்கையும் வியந்து போற்றத்தக்க ஒரு நல்வாழ்க்கையாகும்.


திரு. வி. க. வின் அரசியல் வாழ்க்கை வெற்றி நிறைந்த வாழ்க்கை என்று கூறமுடியாது. ஆயினும் வெற்றி தோல்விபற்றி அந்தச் சான்றோர் கவலை கொள்ளவில்லை. நெறியைப் போற்றுவதிலேயே அவர் ஆர்வம் கொண்டிருந்தார். காந்தியடிகளைப் போல், நெறி தவறி வெற்றி பெறுவதைவிட, வெற்றி கிட்டாவிட்டாலும் நெறியோடு நடப்பதையே பெரிதாகப் போற்றினார். கொள்கைகளைப் பற்றிக் கவலைப் படாதவராக இருந்திருந்தால் அவர் பெரிய பதவியைப் பெற்றிருக்கலாம். பெருஞ் செல்வத்தையும் சேர்த்திருக்கலாம். ஆனால் பதவியோ செல்வமோ அவருடைய உள்ளத்தைக் கவரவில்லை.

நெறியோடு வாழ்வோர் எல்லோரும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதில்லை. சிலர் தோல்வியும் அடைகிறார்கள். நெறியைப் போற்றாமல் வாழ்வோர் எல்லோரும் வெற்றி பெறுவதில்லை. அவர்களில் பலர் தோல்வியுறுகிறார்கள். ஆகையால் வெற்றி தோல்வியை எதிர்பார்த்து வாழ்க்கையை அமைத்துக்கொள்வது தகாது என உணர்ந்தவர் திரு. வி. க. புறத்தே பெறுகின்ற பதவியும் செல்வமும் தருகின்ற இன்பத்தை விட அகத்தே மனச்சான்று தருகின்ற அமைதியே சிறந்தது என்றும், அதுவே முயன்று பெறத் தகுந்தது என்றும், தெளிந்தவர் அவர். ஆகவே தன்கொள்கைகளில் இம்மியும் நெகிழாமல் தூய அற வாழ்க்கையை நடத்தினார். அந்த வாழ்க்கையின் தூய்மையையும் அமைதியையும் சீர்தூக்கிப் பார்த்தால், அந்த அளவில் அவருடைய வாழ்க்கை வெற்றியான வாழ்க்கை என்றே கூற வேண்டும். "திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்றார் திருவள்ளுவர். திரு. வி. க. திரு உடையவராக வாழவில்லை. தெள்ளியராக வாழ்ந்து விளங்கினார். பதவி உடையவராக உயரவில்லை. ஆனால் பண்பாடு உடையவராக உயர்ந்து விளங்கினார்.

அவர் வாழ்ந்த வாழ்க்கை மிக எளிய வாழ்க்கை. வந்த சிறு வருவாயையும் பயன் படுத்தாமல் எளிய வாழ்க்கை நடத்தினார். சொந்த வீடு ஒன்று இல்லாமல் இறுதி வரையில் வாடகை வீட்டிலேயே குடியிருந்தார். அச்சகம் நடத்திய போதிலும், பத்திரிகை ஆசிரியராகப் புகழ் பெற்ற காலத்திலும் தமையனாரின் நிழலையே விரும்பி வாழ்ந்தார். வீட்டை விட்டு வெளியே புறப்பட்டபோதெல்லாம் போக வரப் பஸ் கட்டணத்திற்கோ அல்லது, ரயில் செலவிற்கோ தமையனாரிடம் கேட்டுக் காசு பெற்றுச் சென்றார். திரும்பி வந்ததும் சட்டைப் பையில் மீதியாய் இருந்த காசை ஏழைத் தொழிலாளரிடம் கொடுத்து விட்டு வெறுஞ்சட்டைப் பையோடு இருப்பதில் மகிழ்ந்தார். பெட்டியும் சாவியும் வைத்துப் பூட்டுதல் அறியாமல் பல ஆண்டுகள் வாழ்க்கையை நடத்தினார். தமிழாசிரியராகத் தொழில் ஆற்றியபோது கோட்டும் தலைப்பாகையுமாக விளங்கிய அவர், பத்திரிகை ஆசிரியராகவும் அரசியல் தலைவராகவும் விளங்கியபோது காந்தியடிகளைப்போல் எளிய வாழ்க்கை மேற்கொண்டார். எளிய வெள்ளைக் கதராடை தவிர மற்ற எதையும் உடுத்துவதை மறந்தார். உண்ணும் உணவிலும் தனக்கென்று தனியே எதையும் நாடாமல் மற்றவர்களுக்குக் கிடைத்த உணவில் தாமும் ஒரு பங்கு கொண்டார். வெளியூர்களுக்குச் சென்றபோதும் அவர்கள் இட்ட உணவை உண்டு திரும்பினார். உடல் வாடி மெலிந்த காலத்திலும் தம் உடல் நலத்துக்கு ஏற்ற நல்ல உணவை விரும்பிக் கேட்க உளம் கொள்ளவில்லை. உடல் நலத்துக்குப் பொருந்தாத உணவு கிடைத்த காலத்திலும் அதையே சிறிதளவு உண்டு வெறுப்புக் காட்டாமல் அமைதியாக இருந்தார். ஓய்வு கொள்வதிலும் அவர் இவ்வாறே உடல் நலத்தைப் புறக்கணித்து மற்றவர்களின் அன்புக்கு ஆட்பட்டார். வெளியார் வந்து எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தாலும் தம் அருமையான காலத்தை அவர்களுக்காகச் செலவிட்டார். பகலெல்லாம் பிறருக்காகச் செலவிட்ட காரணத்தால் பத்திரிகைக்கு எழுதுவதற்காகவும் எழுதி அச்சிட்ட புருப் தாள்களைத் திருத்துவதற்காகவும் இரவில் நெடுநேரம் கண்விழித்தார். அவ்வாறு இரவில் விழித்த காரணத்தால் ஓய்வு குறைந்து உடல்நலமும் கெடுத்துக்கொண்டார். முதுமையில் கண்பார்வை இழந்த நிலையில் "இயற்கை ஆற்றல் மிகுந்தது; இயற்கையோடு ஒட்டி வாழாதவர் துன்பப்படத்தான் வேண்டும்; அதை மீற முடியாது. பல ஆண்டுகள் உடலுக்கு வேண்டிய ஓய்வைப் பறித்தேன். இரவைப் பகலாக்கி உழைத்தேன். அதனால் இயற்கை என்னை ஒறுத்தது. என் பார்வையைப் பறித்தது. இப்போது வருந்துவதில் பயனில்லை" என்று மனம் விட்டுச் சொன்னார்.

திருப் பெற்று வாழும் உலகியல் போக்கில் தாம் முன்னேறவில்லை என்பதை அவர் நன்றாக உணர்ந்தார். தூய்மையாகவும் எளிமையாகவும் வாழ்ந்து முடித்தால் போதும் என்ற மன நிறைவு கொண்டார் அவருக்கு உதவியான செயல் செய்ய யாரேனும் முயன்றால், அவர் புன்னகை புரிவார். "அந்த முயற்சி வெற்றி பெறாது. எனக்காக அவர் ஏன் துன்பப்பட வேண்டும்? நான் ஏழையாக வாழப்பிறந்தவன். அதற்காகக் கவலையும் படாதவன். எனக்காக இன்னொருவர் ஏன் இவ்வளவு முயற்சி மேற்கொள்ள வேண்டும்?" என்று சொல்லி அந்த முயற்சியையும் தடுப்பார். சென்னை நகரின் வெப்பமும் நெருக்கடியும் அவருடைய உள்ளத்துக்கு வெறுப்பானவை; உடல்நலத்துக்கும் ஊறானவை. ஒரு முறை அவர் நோயால் நலிவுற்று வருந்தியதைக் கண்ட அந்நாளைய காங்கிரஸ் தலைவர் சீனிவாச ஐயங்கார் அவரை அன்போடு அணுகினார். "முதலியார்! நான் ஒன்று சொல்லுகிறேன் கேட்க வேண்டும். மறுக்காமல் ஒத்துக்கொள்ள வேண்டும். நான் பெரிய வக்கீல். நிறையச் செல்வம் உள்ளவன். எத்தனையோ பேருக்கு எவ்வளவோ செலவழித்து உதவி செய்கிறேன். உங்களுக்கு ஒரு சிறு உதவி செய்ய விரும்புகிறேன். மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். கோடைக்கானலில் உங்கள் பெயரில் ஒரு வீடு வாங்கப் போகிறேன். அங்கே போய் நீங்கள் தங்கி உடம்பு தேறி வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். ஆடம்பரத்தையோ பிறர் உதவியால் வாழ்வதையோ என்றும் விரும்பாத திரு. வி. க. அந்த அன்பான வேண்டுகோளுக்கு இணங்கவே இல்லை. பிடிவாதமாக மறுத்துவிட்டார். பல ஆண்டுகளுக்குப் பிறகு அதைப்பற்றி ஒருவர் கேட்டபோது, "நான் அப்படிச் சொன்னதுதான் சரி. எனக்குக் கிடைப்பதுதான் கிடைக்கும். அதற்கு மேல் நான் ஆசைப் படக் கூடாது. கடவுள் எனக்கு வகுத்தது போதும். அதற்குமேல் எனக்கு உரிமையில்லை" என்று மனநிறைவோடு கூறிவிட்டார். ஒருமுறை அவர் அறியாமலேயே அவருக்கு உதவியான ஒரு முயற்சி செய்யப்பட்டது. அவருடைய புத்தகம் ஒன்றைக் கல்லூரிகளுக்குப் பாடநூலாக்கினால், அதனால் கிடைக்கும் வருவாய் அவருக்கு உதவியாகும் என்று அவர்பால் பேரன்புகொண்டவர்கள் சிலர், அந்த முயற்சியை மேற்கொண்டார்கள். முயற்சி தோல்வியுற்றது சில திங்கள் கழித்து அந்தச் செய்தி திரு. வி. கவின் செவிக்கு எட்டியது. வழக்கம்போல அவர் புன்னகை அரும்பினார். "எனக்குத்தான் தெரியுமே. பொருள் வகையில் எனக்கான எந்த முயற்சியும் வெற்றி பெறாது. இது எனக்கு நன்றாகத் தெரியும். எனக்குச் சொல்லாமலே இந்தப் பாடநூல் முயற்சியைச் செய்யவேண்டுமா? வீணான முயற்சி; வீணான துன்பம்; இனிமேல் இப்படிச் செய்யக்கூடாது" என்றார். அவர் சொன்னது முற்றிலும் உண்மையே. அவர் காலமெல்லாம் அப்படித்தான் இருந்தது. ஆனால் அவர் காலத்திற்குப் பிறகு, அவர் பெயரால் தொடங்கப் பெற்ற மண்டபம், சென்னை இராயப்பேட்டையில் பயனுள்ளதாக விளங்குகிறது. அவர் பெயரால் நிறுவப்பட்ட ஓர் உயர்நிலைப்பள்ளி, சென்னை செனாய் நகரில் மிகப் பெரிதாக வளர்ந்து வருகிறது. அவர் பெயரால் சென்னையின் ஒரு பகுதி, வீடுகளும் தெருக்களுமாய்த் திரு. வி. க. நகர் எனத் திகழ்கிறது. சென்னையில் உள்ள பூங்காக்களுள் மிகப்பெரிய பூங்கா திரு. வி. க. பூங்கா எனத் திகழ்கிறது.

திரு. வி. க. அரசியல் தலைவராய் உயர்ந்தவர் என்பதோடு மட்டும் அவர் வாழ்க்கை நிற்கவில்லை. அவர் சிறந்த எழுத்தாளராய் விளங்கினார். அவருடைய எழுத்துக்கள் இலக்கியவளம் பெற்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் அவருடைய நூல்களுக்கு என்றென்றும் இடமுண்டு. எழுத்தைப்போலவே அவருடைய பேச்சும் இணையற்று விளங்கியது. பேச்சுக் கலைக்கு அக்காலத்தில் அவர் நிகரற்று விளங்கினார். பல துறைகளிலும் அவருடைய பேச்சுச் சிறந்து விளங்கியது. அரசியல் பேச்சு, சமயச் சொற்பொழிவு, இலக்கிய விளக்கம் ஆகிய எல்லாம் அவருக்குப் பெரும் புகழை ஈட்டித்தந்தன. அவருடைய நினைவாற்றல் அவருக்கு வாய்த்த அருமையான செல்வம். ஐந்தாறு பேர் பேசும் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினால், அத்தனைபேருடைய கருத்துக்களையும் சுருக்கித்திரட்டி அழகான வடிவில் தந்து தலைவராக முடிவுரை வழங்குவார். வந்த கடிதங்களை எல்லாம் உடனுக்குடன் படித்து, கிழித்து எறிந்து பற்றற்று விளங்கும் வழக்கமுடையவராக இருந்த அவர், முதுமையில் தம்



வாழ்க்கை வரலாறு எழுதியபோது, பல நிகழ்ச்சிகளை மறவாமல் நினைவிற்குக் கொண்டு வந்து அருமையான நூல் எழுதினார். அத்தகைய நினைவாற்றல் அவருக்கு எழுத்துச் செல்வத்தையும், பேச்சுச் செல்வத்தையும் தந்தது போலவே நட்புச் செல்வத்தையும் தந்தது. பொருட் செல்வம் வாய்க்காதவராக வாழ்ந்தபோதிலும், ஒழுக்கச் செல்வத்தில் அவர் அனைவரும் மதிக்கும் பெருநிலை பெற்றார். காரணம் எந்தத்துறையில் தொண்டாற்றினாலும், எந்தக் கடமையை மேற்கொண்டாலும் செம்மையான நெறி வகுத்து வாழ்ந்த சான்றாண்மையே ஆகும். வளர்க திரு. வி. க. புகழ்! வெல்க அறநெறி!

குறிப்பு - 'எழுச்சி'க் கென்றே அனுப்பிய சிறப்புக் கட்டுரை இது. — ஆ-ர்.

---

## அடுத்த இதழில்.....

**தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடியான திரு. வி. க. பற்றி சிலம்புச் செல்வர் ம. பொ. சி., பேராசிரியர் சாலை இளந்திரையன் ஆகியோர் அனுப்பிய கட்டுரைகள் நமது அடுத்த இதழில் வெளிவரும்.**

— ஆ-ர்.

---

மேலோடு பேசி விடுவரேல்அவ் வாட்சி

# எழுச்சி

எழுச்சி: 5 | திருவள்ளுவராண்டு 1997 கார்-மார்கழி | குரல்: 3-4


## 700 – 701

இன்று தமிழ் அரசாங்க ஊழியர்களின் கழுத்தை நெரிப்பதும்—கவலை அளிப்பதும் 700 ஆ-ம் 701 ஆ-ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபங்கள் ஆகும். சிங்களம் இன்றேல் அரசசேவையில் சம நிலை இல்லை என்ற உண்மையைத் தாங்கி நிற்பவை இவை.

பழைய ஊழியர்களைப் பொறுத்தவரை 55 வயசுக்குமேல் சேவையிலிருப்பின் சிங்கள அறிவு வேண்டுமென்ற கட்டாயம் அமைந்துள்ளது. இது பழைய ஊழியர்களையும் சிங்களம் கற்கத் தூண்டும் தூண்டுகோலாகவே உள்ளது. சாதாரண படிமுறையாக அரச சேவையில் முன்னேறும் ஒரு தமிழ் ஊழியன் பொறுப்புள்ள உயர்ந்த நிர்வாகப் பொறுப்பில் அமரும் காலம் இளைப்பாறும் காலத்தை அண்மிய காலம்தான். இதன் பிரகாரம் அந்தப் பதவிகளுக்கு ஆசைப்படும் தமிழன் சிங்களம் படித்தே ஆகவேண்டும். அல்லது நிர்வாகப் பொறுப்புள்ள உயர் பதவிகள் சிங்களம் தெரிந்த ஊழியர்களுக்கே என்ற கட்டாயம் இங்கு தலைதூக்குகிறது. அங்கும்கூட சிங்களத்தகமை, சிங்களத் திறமையாக மாறுவதைத் தடுக்க முடியாது. அந்த நிலையில் இந்தப் பதவிகள் சிங்களவர்களுக்கே என்ற நிலை உருவாகியே தீரும்.

சிலர் குடும்பப் பொறுப்பின் நிர்ப்பந்தத்தால் —உயர்பதவிக்காக மட்டுமல்ல— 55 வயசுக்கு மேலும் சேவை செய்ய விரும்பலாம். அங்கும் சிங்களம் தடையாகிறது.

எனவே இந்தச் சிங்கள நிபந்தனை நீக்கப்படாதவரை இந்தத் தடைகளும் நீங்கப்போவதில்லை.

புதிய ஊழியர்களைப் பொறுத்தவரை சிங்கள ஊழியனுக்கு இல்லாத சிக்கல் தமிழ் ஊழியனுக்கு விதிக்கப்படுவதை நாம் என்றும்போல அறத்திற்குப்புறம்பானதென்பதைச் சுட்டிக்காட்டி, மனிதாபிமானத்தோடு எதிர்க்கிறோம். நாம் இரண்டாந்தரக் குடிகளின் நிலைக்குத் தள்ளப்படுவதை என்றும் ஒப்பியதே இல்லை.

நிர்வாகத் தேவைக்காக சிங்கள அறிவு வேண்டும் என்ற கருத்தை வாதத்துக்காக ஏற்றாலும் கூட, நிர்வாகப் பொறுப்பற்ற பொறியியலாளர்கள், வைத்தியர்கள், நுண் தொழிலாளர்கள், தமிழ் தட்டெழுத்தாளர், தமிழ்ப் பகுதி கிராம சேவகர்கள் சிங்கள அறிவு பெற்றே ஆகவேண்டும் என்ற நிபந்தனை நீதிக்கே முரண்பட்டதாகும். இவற்றை நோக்குங்கால் நிர்வாகத் தேவைக்காக மட்டும் இந்தச் சிங்களத் தகைமை கோரப்படவில்லை என்ற ஐயம் வலுக்கின்றது.

திறமான சிங்களப் புலமையுடன் உள்ள இலட்சக்கணக்கான சிங்கள இளைஞர்களுக்கே சிங்களம் வாழ்வளிக்கத் தவறி, அவர்களை நகரசுத்தித் தொழிலாளர் வேலைக்கே தள்ளுகின்றபோது, நமது இளைஞர்களுக்கு—நமக்கு அது வாழ்வளிக்கும் என்று எண்ணுவது வெறும் கனவுலகச் சுற்றுலாவாகவே முடியும். பிரச்சினை வேலை வாய்ப்புப் பிரச்சினை—அதற்கு மொழி, இன்றுதற்காலிகத் துணை செய்யலாம் நமக்கு. ஆனால், சிறிது காலத்தில் இந்த வாய்ப்பும் அற்றே தீரும். அன்று இனப் பிரச்சினையாகவே விசுவரூபம் எடுக்கும். இந்த உண்மையைக் காலம் உணர்த்தியே தீரும்—ஐயம் வேண்டாம்.

திறமான நிர்வாகம்தான் காரணமென்றால் தமிழ் ஊழியர் சிங்களம் கற்கவேண்டுமென்ற நிபந்தனைபோல, சிங்கள ஊழியர்களும் தமிழ் கற்க வேண்டும் என்ற நிபந்தனை பிறப்பிக்கப்படாததேன் ? இன்றைய தேசிய அரசின் இரு பங்காளிகளான ஐக்கிய தேசியக் கட்சி தன் தேர்தல் பிரகடனத்திலும், தமிழரசுக் கட்சி தன் கொள்கையிலும் இக்கொள்கையை ஏற்றிருக்கும்போது அதை நடைமுறைக்குக் கொண்டுவராதது ஏன் ? நிர்வாகத் திறமைக்காக இரட்டை மொழிக் கொள்கையை நிறைவேற்ற நாம் முழு மூச்சாக உழைப்போம். அதுவும் சமநேர நிறைவேற்றலாக இருந்தால்—எம்மை முதலில் படிக்கச் சொல்வதை ஏற்கோம். இந்நிலையில் 700 உ-ம் 701 உ-ம் நாம் வரவேற்க முடியாதவை.

## 686

தமிழ் மொழி சிறப்பு ஏற்பாட்டுச் சட்டமும் அதன் கீழ் அமைந்த விதிகளும் நிறைவேற்றப்பட்டு சட்ட மதிப்பைப் பெற்றுள்ளது தமிழ் மொழி — ஏட்டில் ! திறைசேரியும் 686 இலக்கச் சுற்றுநிருபத்தை வெளியிட்டுள்ளது.

சட்டம் தானகவே இயங்குவதில்லை — அது இயக்குவிக்கப்படுவது. தமிழ் மொழிச் சட்டத்தை இயக்க யாருமின்றி அது வேண்டாத ஒன்றாகச் சட்ட ஏட்டில் மட்டும் ஒட்டிக் கொண்டுள்ளது. சிங்களம் சட்டமானதும் ஒரு திணைக்களமே பிறந்தது. ஆனல் தமிழ் மொழிச் சட்டம் பிறந்துவிட்ட போதிலும் இயக்குவிக்க யாருமின்றி எடுப்பார் கைப்பிள்ளை போலாகிவிட்டது.

தமிழ் மொழிச் சிறப்பு ஏற்பாட்டின்படி, தமிழ் மொழியை எல்லா அலுவலகங்களிலும், சிறப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமுல் செய்து, செயற்படுத்துவோமாயின், பல தட்டச்சாளருக்கும், சுருக்கெழுத்தாளர்க்கும், மொழி பெயர்ப்பாளர்க்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும். தமிழ் மொழி அரசாங்க அலுவலகங்களில் உபயோக மொழியாவதுடன், பலர் வாழ்வு பெறுவர் என்பதும் துலாம்பரம்.

எமது ஐந்தாவது ஆண்டு மகாநாட்டில் வற்புறுத்தினேம் இதற்கான ஒரு தனிப் பிரிவு நிர்வாகத்தில் வேண்டுமென்று. இன்று நாளாந்தம் — நடைமுறையில் — தமிழ் பல திணைக்களங்களில் இகழப்படுவதே இதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. ஏன், வட கீழ் மாகாணங்களில் எத்தனை திணைக்களங்கள் இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருகின்றன ? எத்தனை தமிழ்த் தட்டெழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர் ? எத்தனை ஊழியர்களுக்குத் தமிழில் வேலை செய்யும் திறமை, தகமை உண்டு ?

இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யாவிட்டால், இது ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாத கதையாகவே முடியும். சட்டம் மட்டும் தமிழைக் காக்க முடியாது. சட்டத்தை இயக்க வழி வகுக்க வேண்டும்! தமிழ்த் தலைவர்கள் ஆவன செய்வார்களா ?

# செயலாளர் குறிப்புகள்

### 1. நி. எ. சே. தரம் இரண்டு பரீட்சைகள்.

இவ்வாண்டு சனவரியிலும் ஒக்டோபரிலும் நடந்த இரு பரீட்சைகளுக்கும் சேவையில் உறுதிப்படுத்தப்படாத புதிய ஊழியர்தோற்ற இயலாமற் போயிற்று. சங்கத்தின் ஐந்தாம் ஆண்டுக் கூட்டத்தின் பின் எடுக்கப்பட்ட முக்கியமான முதல் நடவடிக்கை இவ்விடயம் பற்றிமுயற்சிகள் ஆரம்பித்ததாகும். ஒக்டோபர் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய நிலைமையை புதிய ஊழியருக்குப் பெற்றுக் கொடுக்காவிடினும், இவ்விடயத்தை நாம் கைவிடாது முயற்சித்து வருகிறோம்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஓர் வேண்டுகோள். புதிய ஊழியர் நி. எ. சே. தரம் இரண்டு பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கும்படி கேட்டு நாம் முன்பு எடுத்த நடவடிக்கைகளை ஒக்றோபர் 7 ஆம் திகதி 12/66-67 இலக்கமிட்ட சுற்றறிக்கையிற் காண்க. முயற்சி தொடர்கிறது.

### 2. மொழிப்பிரச்சனை.

(அ) i. விதவைகள் அனதைகள் ஓய்வுச் சம்பள விண்ணப்பங்கள் பொதுப் படிவம் இல. 86.

ii. சொத்து விபரங்கள் - பொதுப்படிவம் இல. 261.

iii. உடன்படிக்கைப் படிவம் இல. 160.

ஆகியன தமிழ்மொழியில் இல்லாதது புதிய ஊழியரை மிகவும் இடர்ப்படுத்துவதாக திறைசேரிக்கு முறையீடு செய்துள்ளோம்.

2. (ஆ) முன்பு மிகக் கெடுபிடி செய்த அரசினர் மருந்துவக்களஞ்சியம், நீர்ப்பாசனத் திணைக்களம், உணவுத் திணைக்களம் போன்றவற்றில் சம்பளப் பட்டியல், இலவச பிரயாணச் சீட்டுகள் முதலியவற்றுக்கு மொழிபெயர்ப்புக் கொடுக்க அவ்வத்திணைக்கள முதல்வர்கள் இணங்கியுள்ளனர்.

3. (ஆ) தமிழ் தட்டெழுத்தாளர், தமிழ் மொழி பெயர்ப்பாளரையும் தெரிவு செய்தற்கான பரீட்சைகள் முறையே நவம்பர் 3ஆம் 10ஆம் திகதிகளில் நடைபெற்றன. இப்பரீட்சைகளின் முடிவுகள் வெளியானவுடன் தேவையெனக்கேட்ட திணைக்களங்களில் இவர்களுக்கு நியமனம் கொடுக்கப்படுமென எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனுல் எமது உறுப்பினர் மொழி பெயர்ப்பு, தட்டச்சு வேலைகள் செய்யக் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள்.

4. நிதிப்பிரமாணங்கள்- பகுதி ஒன்று தமிழ் மொழி பெயர்ப்புப் பூர்த்தியாகியும் வெளியிடப்படாததால் எமது உறுப்பினர்க்கு ஏற்பட்டுள்ள சிரமத்தைத் திறைசேரிக்குத் தெரிவித்துள்ளோம்.

### 5. இடமாற்றம்

(அ) **திரு. கா. கிறெகறி.** அண்மையில் நி. எ. சே. தரம் ஒன்றிற்குப் பதவியுயர்வுபெற்ற திரு. கிறெகறி எமது செயற்குழு உறுப்பினருமாவார். இவருடைய சேவை மூப்பிற்கேற்ற மேற்பார்வை அலுவல் கொடுக்காது சேவைக்குப் புதிய அலுவலரிடம் கொடுக்கப்படும் வேலை அவருக்கு அளிக்கப்பட்டது. இதை எதிர்த்து வாதாடிய இவ்வுறுப்பினர் சுகயீனமுற்றுச் சென்றதைத் தொடர்ந்து திறைசேரி மேலதிகத் துணைச்செயலாளர் இவரைப் புதிய திணைக்களமொன்றிற்குமாற்றம் செய்து நிலைமையை சீராக்கியுள்ளார்.

(ஆ) **திரு. ச. சிவசம்பு.** இவர் புகைவண்டிப் பகுதியில் கடமையாற்றிவந்த எமது ஒரே உறுப்பினராவார். வழக்கமாக கடிதங்களுக்கு மொழிபெயர்ப்புக் கொடுக்கப்பட்டுவந்தும் அண்மையில் சில கடிதங்களுக்கு மொழிபெயர்ப்புக் கொடுக்கப்படாததால், மொழி பெயர்ப்புத் தரும்படி கேட்டு இவ்வுறுப்பினர் தனக்கு வந்த தனிச் சிங்களக் கடிதங்களைத் திருப்பியனுப்பியதுடன் சங்கத்திடமும் முறையிட்டார். முழு விபரத்துடன் புகைவண்டிப்பகுதிப் பொது முகாமையாளருக்கு ஆட்சேபம் தெரிவித்தோம் நேர்முகப் பேச்சுக்களும் பயனளிக்கவில்லை.

போக்குவரத்து அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கும் திறைசேரி மேலதிகப் பிரதிச் செயலாளருக்கும் இவ்விடயம் அறிவிக்கப்பட்டது. திரு. சிவசம்பு புதியதிணைக்களத்திற்கு 1-12-66 தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளாரென்று தெரிவித்த தி. மே. பி. செ, புகையிரதப் பகுதிப் பொது முகாமையாளரிடமிருந்து விளக்கம் கேட்பதாயும் கூறியுள்ளார்...... அமைச்சும் தனியாக விளக்கம் கேட்டதாக அறிகிறோம்.

(இ) யாழ்ப்பாணத்தில் இரண்டாம் தவணையும் சேவை செய்ய இடமாற்றம் பெற்றுச் செல்ல முயல்வோர் பற்றித் திறைசேரியை எச்சரிக்கை செய்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் என்றுமே சேவை செய்யாத பல நூற்றுக்கணக்கானோர் ஆண்டாண்டு தோறும் மாற்றம் கேட்டு ஏமாற்றம் அடைவதைச் சுட்டிக் காட்டியுள்ளோம்.

6. ஐந்தாம் ஆண்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட, இந்து அலுவலருக்கும் வெள்ளிக்கிழமைகளில் இரண்டுமணி நேர விடுதலை கேட்கும் தீர்மானத்தை, அரசாங்கம் ஏற்று மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துவருவதாகத் திறைசேரி எமக்கு அறிவித்துள்ளது.
இல. 2/9/462 (எச்) இ. சீ. ஏ.

### செயற்குழுக் கூட்ட முடிவுகள்

(அ) திணைக்கள வாரியாக அமைந்துள்ள சங்கக் கிளைகள் வெளியூரிலுள்ள அவ்வத் திணைக்களங்களைச் சார்ந்த உறுப்பினரையும் உள்ளடக்கியவையாயில்லாவிட்டால் வெளியூரிலுள்ள உறுப்பினர் நலனைப் பாதிக்கும் தீர்மானங்களை ஆராயக்கூடாதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

(ஆ) கிளைச் சங்கங்களின் மேற்பார்வைக்குட்பட்ட திணைக்களங்கள் அல்லது பிரதேசங்களிலிருந்து வரும் உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரங்கள் அவ்வக்கிளைச் சங்கங்களின் அனுமதியுடன் கிடைத்தாலன்றி தாய்ச்சங்கச் செயற்குழு அவ்விண்ணப்பங்களை ஆராயமாட்டாது.

(இ) 21 - 10 - 66 இல் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் புதிய கொள்கை உப - குழுவொன்று நியமிக்கப்பட்டது.

1. திரு. செ. கோடீசுவரன் (அழைப்பாளர்.)
2. திரு. வை. சொக்கலிங்கம்
3. திரு. க. பத்மநாதன்
4. திரு. மு. தம்பிமுத்து
5. திரு. த. காசிநாதன்
6. திரு. ச. குமாரசாமி
7. திரு. ஆ. தேவராசன்.

தலைவரும், செயலாளரும் பதவிவழியாய் உறுப்பினராவர்.

### சுற்றறிக்கைகள்

இல. 10/66-67 28 - 8 - 66 உறுப்பினரிடமிருந்து சில தகவல்கள் கேட்கப்பட்டன. ஒரு சில உறுப்பினர் மட்டுமே இவற்றை அனுப்பியுள்ளனர், மற்றையோரும் சீக்கிரம் அனுப்பிவைத்தால் உறுப்பினர் பற்றிய சரியான தவல்கள் சங்கத்தில் இருக்குமென்பதை விளக்கத்தேவையில்லை.

—ந. அமிர்தானந்தா

**சாலோடு நீர்என்று சாற்றுய் கருங் குயிலே!**

# அரசாங்க அலுவலகங்களில் சட்டப்படி தமிழுக்கு அளிக்கப்பட்ட இடம்! இன்று மீறப்படுவது ஏன்?

Treasury Circular letter No G(7)

General Treasury,
Colombo.
March, 9th 1964.

To: All Permanent Secretaries,
and Heads of Departments.
(No. 2 / a / 156 / 16 H)

Implementation of the Official Language Act

Please bring to the notice of all officers of your Ministry / Department for information and necessary action the following statement of the Hon'ble Minister of Finance :—

"While implementing Sinhala as the Official Language it is the policy of Government to give the Tamil Language its due place. Therefore please make it known that this transition should proceed without resort to extremism of any kind and without damage to the self-respect of our citizens. Please appeal to all public servants to bear this well in mind"—Sgd. T. B. Illangaratne.

Sgd. H. Jinadasa Samarakkody,
Secretary to the Treasury.

## Cabinet Conclusion *CPA 278/60*
**of 20 - 12 - 1960.**
**Under General Directives**

*Para 7 "Correspondence with.........*

"Correspondence with the private sector should be in the Official Language. Where, however, a letter is received in English or Tamil a translation of the Official reply in that languages should be attached."

## திறைசேரி சுற்றறிக்கை 686

**மொழிபெயர்ப்பு**

திறைசேரிச் சுற்றறிக்கை இல. 686

இல. 2/9/156/31 (எச்).
பொதுத் திறைசேரி,
கொழும்பு, 1966 ஆம் ஆண்டு
மார்ச்சு மாதம் 26 ஆந் திகதி.

நிரந்தரச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

**தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்)**
**பிரமாணங்கள், 1966**

1966. 2. 3. ஆந் தேதியின் 14,653 ஆம் இல. அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட பிரமாணங்களைப் பார்க்க. அவை மீண்டும் கீழே தரப்படுகின்றன:—

(1) இப் பிரமாணங்கள் 1966 ஆம் ஆண்டின் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்களென எடுத்துக் காட்டப்படலாம்.

(2) சிங்கள மொழி இலங்கையின் ஒரே அரசகரும மொழியாயிருத்தல் வேண்டுமென வெளிப்படுத்தியதான 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் செயற்பாட்டுக்குப் பங்கமில்லாவகையில்,

(அ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லா அரசாங்க அலுவல்களையும் பொது அலுவல்களையும் கையாளுவதற்கும் அரசாங்கப் பொதுப் பதிவேடுகளை வைத்திருந்து வருவதற்கும், அத்தகைய அலுவல்கள் அரசாங்க திணைக்களம் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றில் அல்லது பகிரங்க கூட்டுத் தாபனம் ஒன்றில், அல்லது சட்டபூர்வமான தாபனமொன்றில் நடைபெறுவதானாலும் அன்றேல் இவற்றால் நடாத்தப்படுவதானாலும் தமிழ் மொழியும் உபயோகிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) உத்தியோகத்தர் என்ற தன்மையில் தமது செயல்களைப் புரியும் உத்தியோகத்தர் தவிர்ந்த தமிழ் மொழி மூலம் கல்வியூட்டப்பட்டவர்களாயுள்ள ஆட்களுக்கும் உத்தியோகத்தர் என்ற தன்மையில் செயலாற்றும் எந்த உத்தியோகத்தர்க்கும் இடையிலும் அல்லது தமிழ்மொழியில் அதனது அலுவல்களை நடாத்தும் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள எந்த உள்ளூரதிகார சபைக்கும் உத்தியோகத்தர் என்ற தன்மையில் செயலாற்றும் உத்தியோகத்தர்க்கும் இடையிலும் நடைபெறும் எல்லாக் கடிதத் தொடர்புகளுக்கும் தமிழ்மொழியும் உபயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நெறிகள், ஏற்பாடுகள், என்பவற்றுக்கும் இப்பிரமாணங்களுக்கும் முழு வலுமையும் பயனுமளிக்கும் நோக்கத்துக்கெனக் கட்டளைச் சட்டங்கள், சட்டங்கள் அனைத்தும் எழுத்திலுள்ள எந்த நியாயப் பிரமாணத்தின் கீழேனும் ஆக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட கட்டளைகள், பிரகடனங்கள், விதிகள், துணைவிதிகள், பிரமாணங்கள், அறிவித்தல்கள் அனைத்தும் அரசாங்க வர்த்தமானியும், அரசாங்கத்தினால் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களினால் அல்லது சட்டபூர்வமான தாபனங்களினால் வழங்கப்படும் அல்லது உபயோகிக்கப்படும் ஏனைய அரசாங்க பிரசுரங்கள், சுற்றறிக்கைகள், படிவங்கள் அனைத்தும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்படுதல்வேண்டும்.

2. உங்கள் அமைச்சில்/திணைக்களத்தில், உங்கள் அமைச்சின் கீழுள்ள கூட்டுத்தாபனங்கள் அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றில் இப்பிரமாணங்கள் செயற்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க.

3. அரசாங்க திணைக்களங்களாயின் இணைந்த சேவைகளிலுள்ள பணியாளர் எவரையும் மாற்றியமைக்கையில் முதலில் அத்திணைக்களத்துள்ளேயே அத்தகைய மாற்றம் செய்யப்படல்வேண்டும். இது இயலாவிடின், குறித்த அமைச்சின் திணைக்களங்களுள் மாற்றியமைத்தல் நிகழவேண்டும். அமைச்சுக்கு வெளியால் இடமாற்றஞ் செய்யாமல் அத்தகைய மாற்றியமைத்தலைச் செய்ய இயலாதெனக் காணப்படுமிடத்து, அவ்வாறு மாற்றப்படவிருக்கும் பணியாளரின், அவர்களின் சிங்கள, தமிழ், ஆங்கில அறிவுத் தரத்தைக் குறிப்பிடும் முழு விவரங்களையும் திறைசேரி மேலதிகப் பிரதிச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். அவர்களுக்காகப் பதிலாட்களைக் கேட்கும்போது சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது இவ்விரண்டிலும் தேவைப்படும் தேர்ச்சி குறிப்பிடல்வேண்டும்.

(ஒப்பம்) எச். ஜினதாச சமரக்கொடி,
திறைசேரிச் செயலாளர்.

மதிப்புரை

### "சேர். பொன். இராமநாதன்"

ஆசிரியர்: ஈழவேந்தன். வெளியிடுபவர்: **மா. க. கனகேந்திரன்**
*15*, சுவிசுத்தராம வீதி, கொழும்பு-6.

**விலை -/50 சதம் அஞ்சல் செலவு -/05 சத முத்திரை**

இந்த நாட்டில் பழைய தலைவர்களைப் பற்றிப் பேசும்போது, அவர்கள் சிங்கள மக்களுக்காகப் பாடுபட்டார்கள் என்று கூறுவதில் மட்டும் பெருமையடையும் ஒரு கூட்டத்தினர் நம்மிடையே உண்டு. சிங்கள மக்களுக்காகப் போராடிய தமிழ்த் தலைவர்கள் எவ்வாறு தமிழினத்தின் விடுதலைக்கு வழி காட்டினார்கள் — வகை செய்தார்கள் என்பதை மறைப்பதில் இவர்களுக்கு ஒரு தனிப் பெருமை. இத்தகைய போலித் தலைவர்களால் நமது இனம் தொடர்ந்தும் உருக்குலைந்து அழிவுப் பாதையிலேயே செல்ல வேண்டியதுதான், விமோசனம்-விழிப்பு -கிடையாது.

இந்த வகையிலே சேர். பொன். இராமநாதன் அவர்களின் உண்மையான பணியும் மறைக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே "அவர் ஒரு தேசியப் பெருந்தகை" என்று சொல்வார்கள்—காரணம் சிங்கள மக்களுக்காகப் பாடுபட்டதே. ஆனால் அவர் தமிழினத்துக்கு ஆற்றிய வீரம் செறிந்த பணி மறைக்கப்பட்டு உருக்குலைக்கப்பட்டு இருட்டடிக்கப்பட்டு வருகிறது.

### சங்கத்துக்கு நன்றி

மட்டக்களப்புத் துணை அரசாங்க அதிபரின் கெடுபிடியில் சிக்கி, பல இன்னல்களை அனுபவித்து வந்த மட்டக்களப்பு அரசாங்க தமிழ் பேசும் காணி அபிவிருத்தித் திட்ட மேற்பார்வையாளர் சங்கச் செயலாளர் திரு. சி. பெரியதம்பி அவர்கள் எமது இடையறாத போராட்டத்தின் பயனாக இப்பொழுது தொடர்ந்தும் மட்டக்களப்பு நகர எல்லைக்குள் மீண்டும் வேலை பார்த்து வருகிறார்.

இந்த முயற்சியில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும், அரசாங்க தொழிற்சங்கக் கூட்டணியும், கௌரவ மூதவையாளர் மு. மாணிக்கம் அவர்களும் எடுத்துக்கொண்ட கூட்டு முயற்சிகள் யாவரும் அறிந்ததே.

இதையொட்டி அரசாங்க தமிழ் பேசும் காணி அபிவிருத்தித் திட்ட மேற்பார்வையாளர் சங்கம் எமது சங்கத்தைப் பாராட்டியுள்ளது. பாராட்டி நிறைவேற்றிய தீர்மானம் இதோ:—

"எமது சங்கச் செயலாளர் திரு. பெரியதம்பியின் மாற்ற விடயமாக உடனுக்குடன் வேண்டிய நடவடிக்கையை எடுத்த சகோதர மொழிவழித் தொழிற்சங்கமான அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திற்கு எமது சங்கம் தன் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றது. இம் மாற்றந் தொடர்பான மூல காரணங்களுடன் கூடிய செய்தியை "எழுச்சி"யில் வெளியிட்டு ஆதரவு நல்கிய எழுச்சி ஆசிரியருக்கும், ஆசிரிய குழுவிற்கும் எமது சங்கம் தனது அன்புகனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. மேன்மேலும் உதவியையும், ஒத்துழைப்பையும் தருமாறு கேட்டுக்கொள்கிறது."

இங்கிலேயில் திரு. ஈழவேந்தன் வெளியிட்டுள்ள இந்த வரலாற்று ஏடு, இருட்டறையில் ஒரு ஒளிவிளக்காக அமைந்துள்ளது. இராமநாதனின் உண்மையான—ஒளிமயமான அரசியல் வாழ்வு 1915-க்குப் பிற்பட்டது தான் என்பதை யாரும் மறுத்து விட முடியாது. இக்கருத்தை திரு. ஈழவேந்தன் தனக்கே சொந்தமான கடுகடுத்த மிடுக்கான நடையில், திருப்பத்துக்குத் திருப்பம் திகைப்பூட்டும் வகையில் ஆணித்தரமான ஆதாரங்களுடன் நினைவூட்டுகின்றார்.

8-ம் பக்கம் பார்க்க

**"தீதும் நன்றும் பிறர் தரவாரா!"**

# விடுதலை வேட்கைக்கு வித்திட்ட வீரர்

## தாய் நாட்டின் தொண்டிற்காகத் தன்னையே அர்ப்பணித்த தேசீய திருமகன்

# நாவலர் நாட்டுக்குச் செய்த நற் தொண்டுகள்

“என்று தணியும் இந்தத் தமிழ் மொழித்தாகம் என்று மடியும் ஆங்கில அடிமையின் மோகம்” என்று மக்கள் பாடிக்கொண்டிருந்த காலம், தேசீய சேவையென்ருல் விலைக்கு எத்தனை கிடைக்கும் என்று கேட்ட காலம். “உத்தியோகம் புருஷ இலட்சணம்” சும்மா இருந்து சம்பளம் வாங்கும் ஓர் இலவசத் திட்டம் என்றெல்லாம் இந்நாட்டு மக்கள்



மனக்கோட்டை கட்டி மகிழ்ந்திருந்த காலம். மக்கள் மாத வேதனமும் மருட்சியான பெண், பட்டம் பதவியுமென்ருல் தன் சொந்த நாட்டையே விற்று தாய் மொழியையே புறக்கணித்துப் பிறந்த மதத்தையே உதறித்தள்ளிக் கொண்டிருந்த காலத்தில்தான் இந்நாட்டில் ஒரு தேசீயத் திருமகன் தோன்றினுர் என்பதைப் பலர் இன்னும் நன்கு அறியாதிருக்கலாம். தோன்றியவர் வேறுயாருமல்லர் நமது தேசீயச் செம்மலான நாவலர் பெருமான்தான்.

### தன்மானத்தந்தை

இன்னும் இந்த நாட்டிலே தமிழ்மொழிச் சட்டமென்று ஒன்று வந்த பிறகும் கூட தாய் மொழிக்குத் தகுந்த இடம் கொடுக்கப் பின்னிற்கிருர்கள் யார்? பொது மக்கள், பதவியில் அமர்ந்திருக்கும் உத்தியோகத்தர்கள். தமிழ்ப் பகுதிகளிலே கூட உள்நாட்டு நிர்வாகத்தைத் தமிழில் நடத்தத் தமிழ் உத்தியோகத்தர் தயாராக இல்லை. ஏன் இந்த நிலைமை? யார் இதற்குக் காரணகர்த்தாக்கள்? அன்னியமொழி, அடிமைமொழி, ஆங்கிலமொழி இன்று சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு மொழியிலே கடமையாற்றுவது பெருமை. பேசுவது கௌரவம் என்றே நினைக்கிருர்கள். ஏன்? ஆங்கில மொழியின் மீது ஏற்பட்ட மோகம் தான். ஆங்கிலமொழி சிறந்த மொழி, உலக மொழி, அறிவுச் செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் மொழி என்பதை ஆட்சேபிப்பதற்கு எவருமில்லை. ஆனுல் தாய்மொழியை விற்று உதறித்தள்ளி, வேற்று மொழிக்கு இடம் கொடுக்க முற்படுவதுதான் பொறுக்க முடியாத செயல். இதற்கு முற்றுப் புள்ளி வைக்கத் தோன்றியவர்

தான் நாவலர் பெருமான். இந்த நாட்டு மக்கள் அரசனை நம்பிப் புருஷனை இழந்த கதையாக அரச உத்தியோகங்களை நாடிச் சொந்தத் தொழில்களை மறந்து விடக் காரணமென்ன? அக்காலத்தில் அரசமொழியாக இருந்தது ஆங்கில மொழிதான். இந்த ஆங்கில மொழியை நமது மக்களுக்கு ஊட்டிவைத்த பெருமை யாருக்கு உரியது? இந்த ஈழ நாட்டிலே ஆங்கில பாடசாலைகள் நிறுவி அன்னிய மொழியைப் புகட்ட எத்தனித்தவர்களுக்குத்தான் இந்த மானம் கெட்ட செயல் உரியதாகும். ஆரம்ப காலத்திலே ஆங்கில பாடசாலைகள் நிறுவித் தாய் மொழிக் கல்வியைத் தடை பண்ண எத்தனித்தவர் யார் என்று இடித்துக் கூறவேண்டியதில்லை. இந்த நாட்டிலே கல்வித் தொண்டுகள் செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்டவர்கள்தான். தேசீய மொழிகளை அழித்து ஆங்கில மொழியை உத்தியோக மொழியை நிலைநாட்ட எத்தனித்தவர்களிடம் தன்னந்தனியாக எதிர்ப்புக் காட்டி தன் மானத்தை முன்னிறுத்தித் தேசியப் பற்றை முதன்முதலாக இந்நாட்டில் ஏற்படுத்தப் பாடுபட்ட பெருமகன்தான் நாவலர் பெருமான்.

### வேரறுத்த விஷமிகள்

மேலை நாடுகளிலிருந்து ஈழ நாடு வந்து “உங்களுக்கு நன்மை செய்கிருேம்” என்று தம்பட்டம் அடித்துத் தொண்டாற்றியவர்களின் அடிநாக்கிலே நஞ்சு. நுனிநாக்கிலே தேன் சொட்டியது. சிறுபிள்ளையிடம் சர்க்கரையைக் கிள்ளிக் கொடுத்து இனிப்புக் காட்டி விட்டுக் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்தவன் கதை மாதிரியே உத்தியோக உருசியை உண்டுபண்ணி, நாட்டுப் பற்று மொழிப்பற்று முதலியவற்றை வேரறுத்து விட்டார்கள் இந்த விஷநரிகள். தன் நாட்டுப்பற்று, தாய்மொழிப் பற்று அரசாங்க உத்தியோகத்தரிடம் அஸ்தமித்து விட்டது. ஆராயுமிடத்து வேறு காரணங்கள் புலப்படவில்லை. ஒரு இனத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமாயின் அந்த மக்களின் மதத்தையும், மொழியையும் வேரறுக்க வேண்டுமாம். இந்தக் கைங்கரியத்தை முன்னின்று நடத்தியவர்கள்தான் மேல்நாட்டுப் பாதிரிமார்கள்.

### அரசகரும மொழி மீது அன்பு

வியாபாரத்துக்கென்று வந்தவர்கள் விபரீதமுறையிற் பணியாற்ற முற்பட்டனர். இந்த நாட்டின் சொந்த மொழிகளை

வெ. சு. நடராசா

மதங்களை நிந்தனை செய்து அந்நிய மொழியை மதத்தைப் பரப்ப முனைந்து நின்றனர். இந்நாட்டின் வீர வேந்தர்களையும் பணிகளையும் மறந்தனர். ஆங்கிலக் கல்லூரிகள் தலைகாட்டத் தொடங்கின, இக்கல்லூரிகளினின்றும் தோன்றிய இளைஞர்கள் சுதேச உடலும், மேல்நாட்டுப் பற்றும், ஆங்கில உள்ளமும் படைத்தவராக வெளியேறினர். மேல் நாட்டிலிருந்து வந்த எந்த ஒரு கருத்தையும் ஆராய்வின்றிக் கைகொட்டி வரவேற்கத் தலைப்பட்டனர். மேல் நாட்டின் மீது மோகம் ஏற ஏறத் தாய்நாட்டுப் பற்றுச் சீர்குலைந்தது. அக்காலத்து அரசமொழி ஆங்கிலம் மீது காதல் அதிகரிக்கத் தாய் மொழி தமிழ் மீது வெறுப்பு ஏற்பட்டது, தமிழ் மொழியை வெறுத்து ஒதுக்கினர். இக்காலத்திலும் நிலை அதே நிலை தான். அரசகரும மொழிமீது அன்பு சொரியத் தாய்மொழி தவிடுபொடியாகின்றது.

### தட்டியெழுப்பிய தலைமகன்

யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களுக்குப்பின் இந்த நாட்டிலே தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் வளர்க்க முற்பட்ட முதற் தமிழ் மகன் யார்? தலை குனிந்து கையேந்தி நின்ற மக்களை உற்சாகமூட்டித் தட்டியெழுப்பித் “தமிழன் என்ருேர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு, அமிழ்தம் அவனது மொழியாகும், அன்பே (சிவமே) அவனது வழி (மார்க்கம்) யாகும்” என்பதற்கிணங்கத் தொண்டாற்றியவர் வேறு யாருமல்லர். தேசிய வீரர் நாவலரே.

### வேலையை உதறித் தள்ளிய வித்தகர்

பாதிரிமார்களின் ஆதிக்கம் மக்களைப் பல கோணங்களிலிருந்து தாக்கியபோது தமிழ் மொழியையும் மதத்தையும் அழிக்கக் கங்கணம் கட்டி நின்றபோது அந்தக் காலத்தில் அடிபணியாது, மனம் சலியாது எதிர்ப்புக் கொடுத்துத் தமிழ் மொழியைப் பாதுகாத்துத் தந்தவர் நாவலரவர்கள். தமிழ் மொழியை வெறுத்தவர்களை விரும்பிப் படிக்கச் செய்தவர் நாவலரவர்கள். இக்காலத்தில் எத்தனை தேசத் தொண்டர்கள் தமிழ் மொழியை விரும்பிப் படிக்கிருர்கள். மற்றவர்களைப் படிக்கச் செய்கிருர்கள். அன்று அவர் தன்னந் தனியே சாதித்த காரியங்களை இன்று கட்சிகளோ, காங்கிரசுகளோ சாதிக்க முடியாத இந்த நாட்டிலே தமிழுக்குத் தொண்டாற்றியவர் பலர் இருக்கலாம். ஆனுல் நாவலரவர்களே முதன் முதலாக இந்த நாட்டில் “தன் கடன் தமிழ்ப் பணி புரிவதே” என்று தொண்டாற்றியவர் என்பதை மறுப்பவர்கள் யாருமுண்டோ? நாவலர் சேவைகளை அவர்காலக் கண்ணுடி போட்டுக் கொண்டு பார்க்க வேண்டும். அந்நியர் ஆதிக்கம் அளவுக்கு மீறிவிடவே பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய வேலையை உதறித் தள்ளித் தேசீயத் தொண்டில் ஈடுபட விரதம் பூண்டார்.

### பலவித பணிகள் ஆற்றிய ஒரே மகன்

மக்களுக்குச் சேவை செய்ய முற்படும் ஒருவர் மறைந்து நின்று, ஒதுங்கி நின்று, வேறொரு போர்வையின் கீழ் பதுங்கி நின்று, ஒருபோதும் ஒரு தொண்டைச் செய்ய முடியாது. ஆகவே அவர்கள் நாட்டு மக்களுடன் ஊடாடி நன்மை, தீமைகளில் பங்குபற்றி சுகதுக்கங்களிற் கலந்து, தன் நலம், தற்பெருமை, தன்வாழ்வு, தன்தொழில் ஆகியவைகளை உதறித்தள்ளிவிட்டு “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்று முன் வருபவர்கள்தான் சமூகத் தொண்டில், தேசத் தொண்டில் சிறந்த வெற்றி காண முடியும். ஈழநாட்டிலே தமிழன் தமிழனுகத் தன் மானமுடன் தனது மக்களிடையே தொண்டாற்ருது பிறிதொரு சமயத்தில் புகுந்து அந்தப் போர்வையைப் போட்டுக்கொண்டு அந்த மத முத்திரையுடன் தொண்டாற்றியவர் பலர் இருக்கலாம். தன் மொழி தாய்மொழியைச் சரியாகக் கற்காமல் வேற்று மொழிகளில் வல்லுனராகி வாய்ச்சொல் வீரராகி வந்து தொண்டாற்றுபவர் பலர் இருக்கலாம். தான் பிறந்த இந்த நாட்டையே விட்டோடிச் சென்று வேறு நாடுகளிலிருந்து தொண்டாற்றுவர் வேறு சிலர். ஆனுல் தான் பிறந்த மதத்திலேயே மொழியிலேயே நாட்டிலேயே இருந்துகொண்டு பல துறைகளில் தொண்டாற்றிய ஒரே மகன் அந்தக் காலத்தில் நாவலரவர்கள்தான்.

### தேசீய சேவை உணர்ச்சி

இந்திய நாட்டிலே மகாத்மா காந்தியடிகள் பிறநாடு சென்று அந்த நாட்டிலே தன் நாட்டு மக்கள் பட்ட துயரத்தைக் கண்டதுதான் தன் நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனுல் நாவலருக்கோ கப்பலேறிக் கடலைத் தாண்டிக் கண்டுவராது பிறசமயத் தொண்டர்கள் என்று சொல்லிக்கொண்டு இந்நாட்டுக்கு வந்து இந்த ஈழ நாட்டிலே சமயத்தையோ, மொழியையோ, தேசீய உணர்ச்சியையோ வேரறுக்க முற்பட்டவர்களைக்கண்டபோதுதான் தன்மான உணர்ச்சி தளிர்விட்டுத் தழைக்கத் தொடங்கியது நாவலருக்கு.

### பல தொண்டுகளில் ஒரு சில

தேசியப் பாடசாலைகள் நிறுவுவது, தேசீயப் பத்திரிகைகள் நடத்துவதற்கு அடிகோலி வைப்பது, அரிய தமிழ் நூல்களை வெளியிடுவது, கிறிஸ்தவ பைபிள் போன்ற பெருநூல்களை மொழிபெயர்ப்பது, செய்யுள் நூல்களை வசன நூற்களாக்குவது, வசன நடையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதுமல்லாது அச்சகங்களை நிறுவி நூல்கள் பல வெளியிட்டார். சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளிற் பயில வேண்டுமென விரும்பினுர். அவர் விருப்பம் வீண்போகவில்லை. அனேக இடங்களில் இந்துக் கல்லூரிகள், வித்தியாசாலைகள் பிற்காலத்தில் தோன்றின. “ஈழநாடு”, “இந்துசாதனம்”, “சிவதொண்டன்” முதலிய தேசியப் பத்திரிகைகளும் தமிழ் மக்களாலேயே தோற்றுவிக்கப்பட்டுத் தொண்டாற்றுகின்றன. சைவாலயங்கள் சீர் பெற நடைபெற வேண்டுமென விரும்பினுர். திருக்கேதீஸ்வரம் முதலிய சிவஸ்தலங்கள் புனருத்தாரணம் பெற வேண்டுமென உழைத்தார். இன்று நடைபெறுகின்றன.

கரையூரில் பேதி நோய் கண்டபோது தானே நேரில் சென்று இவர் ஆற்றிய சமூகப்

8-ம் பக்கம் பார்க்க

“ ஐயம் புகினும் செய்வன செய்! ”

# தமிழ் மொழிச் சட்ட விதிகளை செயற்படுத்த சங்கம் முயற்சி

6-ம் பக்கத் தொடர்ச்சி

## விடுதலை வேட்கைக்கு....

யாக, கொடை வள்ளலாக, தீர்க்க தரிசியாக, மதாபிமானியாக நாட்டு மக்களைக் கவர்ந்தவர் இவர்.

மதக் கோட்பாடுகளில் அசையாத நம்பிக்கை கொண்டவர் அவர். அவரின் வாழ்க்கையையே இயக்கும் சக்தியாகவும் மதம் விளங்கியது. அவரின் பலம், திட்பம், ஆற்றல் யாவும் மத நம்பிக்கையிலிருந்து பிறந்தனவே. தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ்ந்த ஒரு பக்தன் அவர். தன் வாழ்நாள் முழுவதிலும் இறைவனைப் பிரார்த்தனை பண்ணுத நாளே கிடையாது. எதற்கும் இறைவனின் துணையையும், கருணையையுமே நாடி நிற்பவர். அவரின் சமய வாழ்க்கையின் ஓர் அங்கமாகவே அரசியல் வாழ்க்கை விளங்கியது. வினைத் தூய்மையும், சேவையும் அவரிலிருந்து பிரித்தெடுக்க முடியாதன.

எமக்கு அவர் விட்டுச் சென்றவற்றை இவ்வளவு என்று அளந்து சொல்ல முடியாது. இளைய சந்ததியினரின் கல்விச் செழிப்புக்கு அவர் நிறுவியுள்ள கலைக் கோயில்கள்; இறை வழிபாட்டுக்கு அவர் தாபித்துள்ள பெருங் கோயில்கள் எத்தனை எத்தனையோ. ஆயினும், பண்பு, ஒழுக்கசீலம், தன்னடக்கம், வீர உணர்வு, இறை நம்பிக்கை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாக அவர் வாழ்ந்து காட்டியமை இவை எல்லாவற்றையும் விஞ்சி நிற்கின்றன. லௌகீகங்களிலும் பார்க்க, ஒழுக்க ஆத்மீகப் பண்புகளே உயர்ந்தவையென எமக்குப் போதித்துள்ளார். மனித ஈடேற்றம் பரஸ்பர அன்பிலும், நல்லெண்ணத்திலும், பிணைப்பிலும் தங்கியுள்ளதேயன்றி, வெறுப்பிலும், வெகுளியிலும் அல்ல என்பது அவரின் திடமான நம்பிக்கை. நிலையானதைப் போற்றுவதற்கேயன்றி நிலையற்றனவற்றை ஏற்றுவதற்கல்ல, மனிதன் இங்கு தோன்றியது என அவர் கூறியுள்ளார். உலக விவகாரங்களுக்குள் மூழ்கி அவற்றுக்கு அடிமைப்பட்டு, அதனுல் இறையுணர்வை மறத்தல் எவ்வளவு பேதமை என்பதை அவர் வற்புறுத்தியுள்ளார். வாழ்வு முழுமை பெறுவது இறைவனுடன் இணையும் போதே. மனிதனின் பேரானந்தப் பெருவாழ்வு எடுப்பதில் அல்ல, கொடுப்பதிலேயே தங்கியுள்ளது. மேலும் தன்னலங் கருதாது நாட்டின் நலனுக்காகவும் மனித இனத்தின் முன்னேற்றத்திற்காகவும், இறைவனின் தொண்டிற்காகவும் அவன் வாழும் தியாக வாழ்வே பெருமகிழ்வு நிறைந்ததாக இருக்கும். இவ்வாறு விளக்கியுள்ளார்கள் சேர் இராமநாதன் அவர்கள்.

ஈழத்தின் புனித சீலர், மக்கள் அன்பன், சட்டமன்றத்தின் தந்தை, தேசத் தலைவர், ஈழத்தின் முடி சூடா மன்னன் என்றெல்லாம் நாட்டு மக்களால் போற்றிப் புகழப்பட்ட அன்னுருக்கு அஞ்சலி செலுத்துவோமாக. இத்தகைய பெரும் குணம் நிறைந்த பெருந்தகைகள் ஈழத்திலே மீண்டும் தோன்றிப் புத்தொளியையும் புத்துணர்ச்சியையும் மீண்டும் நல்குவார்களாக.

தமிழ்மொழிச் சட்ட விதிகளை நடைமுறையிற் செயற்படுத்துவது பற்றித் திறைசேரி சுற்றறிக்கை 686ஐ வெளியிட்டது. அதைச் செயற்படுத்தச் சங்கம் முயற்சி எடுத்து வருகிறது. முக்கியமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இவை செயற்படுகின்றனவா எனச் சங்கம் ஆராய்கிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள பெரும்பாக இறைவரி அலுவலர் அலுவலகங்களில் தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள், தமிழ் தட்டெழுத்தாளர்கள், தமிழ் தட்டச்செழுத்துக் கருவிகள் உண்டா? அரசாங்க அதிபர்கள் அலுவலகங்களில் இவையுண்டா? என்பன போன்ற விபரங்களைச் சங்கம் திரட்டி வருகிறது. இதில் ஒத்துழைக்கும்படி ஒவ்வொரு வடகிழக்கு மாவட்டக் கிளைச் செயலாளர்களும் வேண்டப்படுகின்றனர்.

இதேபோன்று சகல திணைக்களங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்று அறிய முயற்சிகள் நடக்கின்றன. முக்கியமாகத் தலைமை அலுவலகங்களில் உள்ள உறுப்பினர்கள் இவ் விபரங்களைத் தந்துதவும்படி வேண்டப்படுகின்றனர்.

நமது கவியரங்கம்

## சிந்திக்க வேண்டாமா சிறிது வேளை?

"செல்லம்"

விடையின்றி வேதனையில் வெந்திட்ட வேளையிலே
விடிவு தேடத்
தடைசெய்த சம்பளத்தைத் தந்திட்டா ரென்றெண்ணிச்
சாந்தி கொண்டு,
உடைவாங்கி உண்டுடுத்தி ஒருக்களிக்கும் தோழர்காள்
உன்னிப் பாரீர்,
தடைசெய்த சம்பளத்தைத் தந்திட்டால் வந்திடுமா
தமிழர் வாழ்வே?

கொல்லாமல் கொன்றிட்ட கூட்டத்தி ஞட்டங்கள்
குன்றிப் போகச்
சொல்லாமல் கொள்ளாமல் தோன்றிட்ட மாற்றத்தால்
துன்பம் நீங்கிப்
பல்லாண்டாய்ப் பைந்தமிழர் பட்டதுயர் தீர்ந்ததெனப்
பகரும் தோழா
பொல்லாத காலங்கள் போய்விட்ட தென்ருநீ
பொறுமை கொண்டாய்?

உத்தியோக வாழ்வுக்கே ஊறுவந்த போதிலுமே
உள்ளம் நொந்துன்
தித்திக்கும் தேன்மொழிக்கும் செந்தமிழர் நாட்டிற்கும்
தீங்கு செய்யும்
உத்தேசம் கொள்ளாமல் உறுதியுடன் நீநின்றே
உழைத்த தோழா
சத்தியத்தின் வழியுனக்குச் சாந்திகொடா தென்ருநீ
தயங்கி விட்டாய்?

தமிழர்க்குத் தமக்கென்ருேர் தனியாட்சி வேண்டுமென்ருய்
தரணி மீதில்
அமிழ்தான நம்மொழியில் அரசாட்சி செய்வொமென்ருய்
அன்னை நாட்டில்
உமிழ்நீர்போற் குறைவின்றி ஊறிவந்த எண்ணங்கள்
ஓடும் நீர்மேற்
குமிழிகளாய் மறைந்தொழிந்து குறைந்திட்ட காரணமென்
கூருய் தோழா?

ஆட்சியினர் கூறுகின்ருர் அரசாங்க சேவையிலே
ஆசை யென்ருல்
ஆட்சிமொழி நீகற்றுத் தேர்ச்சிபெற வேண்டுமென
அறுபத் தெட்டில்,
தாட்சணியம் வேண்டுமெனக் கேட்டவரும் சரியென்று
சாற்றி விட்டால்,
மீட்சியுனக் கில்லையென்ரு வேதனையில் மூழ்கிவிட்டாய்
விளம்பு தோழா?

சென்றிட்ட சிலஆண்டாய் சிதைவுற்ற கொள்கைகளைத்
திரட்டி யொன்ருய்
குன்றிட்ட விளக்கன்ன குறைவற்ற ஒளிபரப்பக்
கொடுக்க வென்ருல்,
நன்றியுடன் நம்கடனை நாம்செய்ய வேண்டாமா
நம்நாட் டிற்கு,
அன்றிட்ட ஆணைகளை அகத்திருத்த வேண்டாமா
அறைவாய் தோழா?

1-ம் பக்கத் தொடர்ச்சி

## ஆதியிலே அரசர் கல் வெட்டில்....

### தமிழாக்கம்

எனது எண். எப்/பிஈ. 3/ரியூ.
விவசாயத் திணைக்களம்,
பி. ஈ. பிரிவு, பேராதனை.
16 ஒக்தோபர், 1966.

கௌரவ பொதுப் பொருளாளர்,
அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்,
676, காலி வீதி,
கொழும்பு-3.

அன்புள்ள ஐயா,

சங்க உறுப்புரிமைப் பணம் — ஒக்தோபர், 1966.

.....................................................

2. முன்பெல்லாம் ஆங்கிலத்தில் அனுப்பி வந்த உறுப்புரிமைப் பணப் பட்டியல் 1966 ஒக்தோபர் மாசத்திற்குத் தமிழில் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த வேலை செய்யும் அலுவலர் தமிழில் தேர்ச்சி இல்லாதவர். ஆகையால் முன்பு போல் ஆங்கிலத்தில் அனுப்பி வைத்தால் நன்றியுடையவனுக இருப்பேன்.

3. .....................................................

உங்கள் உண்மையுள்ள,
ஒப்பம்.
விவசாயத் திணைக்கள அதிபருக்காக

* *

My No. F.

Hony. General Treasurer,
Arasanka Eluthuvinaignar Sankam,
676, Galle Road,
Colombo-3.

Dear Sir,

Your endorsement and the list are returned herewith as they are not in the Official Language. Please be good enough to address all Communications to this office in the Offcial Language or with an English translation. If this is not done in future all your communications are likely to remain unanswered.

Yours faithfully
Sgd.
for District Judge Tangalle.

District Court,
Tangalle.
15. 10. 66.

### தமிழாக்கம்

எனது எண். எப்.

கௌரவ பொதுப் பொருளாளர்,
அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்,
676, காலி வீதி,
கொழும்பு-3.

அன்புள்ள ஐயா,

உங்கள் குறிப்பும் பட்டியலும் அரசகரும மொழியில் இல்லாதபடியால் திருப்பியனுப்பப்படுகின்றன. தயவு செய்து இந்த அலுவலகத்துக்கு எழுதும் கடிதங்களனைத்தையும் அரசகரும மொழியில் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்புடன் அனுப்புக. இனிமேல் அப்படிச் செய்யாவிட்டால் உங்கள் கடிதங்களுக்குப் பதில் அனுப்பாமலே போகக் கூடும்.

உங்கள் உண்மையுள்ள,
ஒப்பம்.
தங்காலை மாவட்ட நீதிபதிக்காக.

மாவட்ட நீதிமன்றம்,
தங்காலை.
15. 10. 66.

## உறுப்பினர் கவனத்திற்கு.....

1. வடக்கில் என்றுமே சேவை செய்யாதோர் பட்டியல் ஒன்றைத் தயாரித்து திறைசேரிக்கு அனுப்புவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் அக்கறையுள்ள உறுப்பினர்கள் எமது சுற்றறிக்கை இல: 10/66-67-இல் கேட்ட விபரங்களை இதுவரை அனுப்பாதிருந்தால் உடனே அனுப்பி வைக்கும்படி வேண்டப் படுகின்றனர்,
2. நி. எ. சே. தரம் 2க்கான தனிச் சிங்கள நியமனக் கடிதங்களை திறைசேரிக்குத் திருப்பியனுப்பிவிட்டு, பிரதியுடன் எமக்கு அறிவியுங்கள்.
3. சம்பளப் பட்டியல் புகைவண்டிச் சீட்டுகளில் மொழிபெயர்ப்புப் பெறுவதில் இடர்கள் இருந்தால் உடனே அறிவிக்குக,

—பொதுச் செயலாளர்.

### வாழ்த்து

எமது கிறித்தவ உறுப்பினர்க்கு நத்தார் புத்தாண்டு வாழ்த்துகளைச் சமர்ப்பிக்கிருேம்.

—பொதுச் செயலாளர்.

எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்

# அரசாங்கத்தின்மீது கண்காணிப்பு !

6-ம் பக்கத் தொடர்ச்சி

## விடுதலை வேட்கைக்கு வித்திட்ட வீரர் . . . . .

பணி வியக்கத் தக்கது. ஏன் எனில் சாதிப் பாகுபாடின்றித் தொண்டாற்றியிருப்பார் என்பதில் ஐயமுண்டோ?

அரசாங்கத்தின் ஊழல்களை அம்பலப்படுத்தினர். பொதுமக்கள் துயரை மேலானவர்களுக்கு முறையீடு செய்து, அரசாங்கம் ஒரு விசாரணைக் குழு நியமிக்கு மளவுக்குப் பாடுபட்டார். விசாரணைக் குழுவின் அறிக்கை அரசாங்க அதிபரையே சார்ந்து நின்றது. விட்டாரா நாவலர். இல்லை. லண்டனிலுள்ள குடியேற்ற நாட்டதிகாரிகளுக்கு முறைப்பட்டு வெற்றியும் கண்டார். அக்காலத்திலே அடிமையாக இருந்த நாட்டிலே ஆளும் வர்க்கத்துக்கு எதிராக ஒரு இயக்கம் நடத்த மகாத்மா காந்தியடிகளுக்கிருந்த நெஞ்சுரமும் மனவலிமையும் போன்றல்லவா இருந்திருக்கின்றது நாவலருக்கும்.

உண்டுபண்ணியது. எனவே தான் மக்கள் இவரைத் தெய்வமெனப் போற்றிப் புகழ்வதில் தவறில்லை. நாவலர் வாழ்க்கை தமிழன் தன்மானத்துடன் வாழ வழி காட்டவேண்டும். செயற்கரிய பல சேவைகளைச் செய்த தேசிய வீரரைப் போற்றவேண்டியது ஈழ மக்களது தலையாய கடமையாகும்.

**தேசிய வீரர் நாவலர்**

**என்ற கருத்தை இலங்கையில் முதன்முதல் எழுப்பிய பெருமை இக்கட்டுரையாசிரியரான திரு. வெ. சு நடராசா அவர்களையே சாரும். பல்வேறு கோணங்களில் நாவலர் ஆற்றிய பணிகளைப் பற்றிப் பல கட்டுரைளை இதுவரை இவர் எழுதியுள்ளார்.**

**—ஆர்.**

### தமிழ் மொழிக்கு உரிய இடம்

தமிழ் மொழி அரியாசனம் ஏறவேண்டும் என்று உழைத்தார். பணிகள் பலவற்றையும் தமிழிலேயே செய்துவந்தார். தன் வாழ்நாளைத் தமிழுக்காகவும் சைவத்துக்காகவும் அர்ப்பணித்தார். தமிழ், இந்துப் பல்கலைக் கழகங்கள் நிறுவினால் தான் தமிழ் மொழியையும் சைவத்தையும் வளர்க்க முடியுமென உணர்ந்திருந்தார். இன்று தமிழ், இந்துப் பல்கலைக் கழகங்கள் நிறுவ எடுக்கும் முயற்சிக்கு நாவலர் ஆசி கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

### அரசியலில் நாவலர்

இலங்கையின் அரசியலில் நேரடியாக நாவலர் ஈடுபட முடியாவிட்டாலும் அரசியற் தொண்டு செய்ய முன்வருபவர்களுக்குச் சேவை செய்வதன் மூலம், ஒத்துழைப்புக் கொடுப்பதன் மூலம், உதவி ஊக்கம் காட்டுவதன் மூலம் ஒரு பொது நலச் சேவையைச் செய்ய முடியும் என்பதை நன்குணர்ந்திருந்தார் நாவலர். தமது ஏனைய பணிகளின்றேற் போலும் நேரடியாக அரசியலில் குதிக்காதிருந்தனர். சிங்கள மக்களாலும் போற்றப்படும் அரசியல்வாதி இராமநாதனை வள்ளலைச் சட்டசபைக்கு அனுப்ப மூலகர்த்தாவாக நாவலர் விளங்கினர். பொது மேடைகளில் இராமநாதனை ஆதரித்துப் பேசி வெற்றி கண்டவர் நாவலர். இராமநாதனை அரசியலில் ஈடுபடச் செய்ததனாலன்றோ இலங்கை விடுதலை பெற அத்திவாரமிடப்பட்டது. எனவே இந்நாட்டின் சுதந்திரத்துக்கு முதன் முதலில் வித்திட்டவர் நாவலர் என்பதே பொருந்தும். ஆகவேதான் நாவலர் ஒரு தேசீய வீரன் என்று போற்றப் படுவதில் முதன்மை வகிக்கின்றார்.

நாவலர் வாழ்க்கை சாதாரண மக்களிடத்தில் ஒரு பிரேமையை

5-ம் பக்கத் தொடர்ச்சி

### சேர். பொன். இராம. . .

சில போலித் தலைவர்கள் காண மறுக்கின்ற—காண்பிக்க மறுக்கின்ற—அசல் இராமநாதனை—உண்மையான இராமநாதனை—அந்த மறத் தமிழ் வீரனை—திரு. ஈழவேந்தன் புத்துயிரளித்து நம்மிடையே நடமாட விட்டுள்ளார். ஒவ்வொரு தமிழனும் படிக்கவேண்டிய—அறியவேண்டிய பதார்த்த நூல் இதுவாகும்.

நூல் சிறிதாயினும் கடுகு போல் காரமானது. அச்சு வேலைக்கு அழகூட்டும் உறுதி பெற்ற இரஞ்சன அச்சகத்தில் இந்நூல் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

—தே.—

### "சேர். பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாறு"

ஆசிரியர்: மு. வயித்திலிங்கம்
முதல்வர், சாவகச்சேரி,
இந்துக் கல்லூரி.

இதுவரை இராமநாதனின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆசிரியர்கள் காணாத புதுமையான முறையில் — எங்கும் காணாத நிழற்படங்களுடன் — எழுதப்பட்ட புதுமையான வரலாற்று ஓவியம் ஒன்றை சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதல்வர் திரு. மு. **வயித்திலிங்கம்** அவர்கள் எழுதி முடித்துவிட்டார்கள். பல கிடைத்தற்கரிய சான்றுகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் போற்றித் தமராக்கொளல்" என்றார் வள்ளுவர். பெரியோரைப் போற்றாத நாட்டில் பெரியோர் தோற்ற முடியாது. இந்நூல் வெளியிட ரூ. 20,000/— தேவை. ஆசிரியர் ரூ. 10,000/— போடுவார். மீதிப் பணத்தைத் தமிழ் அபிமானிகளிடம் எதிர்பார்க்கிறார். ஆவன செய்வீர்களா?

— ஆ-ர்.

## கூட்டாட்சி வாதிகள் தீவிரம் ?

( நமது நிருபர் )

தேசிய அரசாங்கம், இந்நாட்டு வளர்ச்சி துரிதப்படுத்த வேண்டுமானால், நாட்டின் பல்வேறு இன, மத மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகிறதல்லவா?

நாட்டு மக்களின் ஒருமித்த செயலும் ஒற்றுமையுமிருந்தால் தான் பொருளாதாரத் துறையில் நாடு முன்னேறும் என்பதைக் கூட்டாட்சி வாதிகளும் நன்கு உணர்ந்துள்ளனர்.

இந்த அடிப்படையில் நாட்டு மக்களின் ஒற்றுமை வளராது தடைப்படக் கூடிய முறையில் இவர்கள் வகுப்பு வெறிக் கூச்சலைக் கிளப்பியுள்ளனர் சிங்கள மக்கள் மத்தியில். அதே நேரம் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் அரசாங்க மட்டத்தில் உள்ள உறவைப் பலவீனப்படுத்தி தமிழ் மக்களின் ஏமாற்ற உணர்ச்சியையும் சலிப்பையும் வளர்த்து மறுபுறத்திலும் தேசிய ஒற்றுமையைக் குலைக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

உதாரணமாக தமிழ் மொழிச் சட்டத்தை அடியோடு செயற்படாது செய்து அதை வெறும் குதிரைக் கொம்பாக்க இதே இயக்கம் முடுக்கி விடப்பட்டுள்ளதாம். இந்த இயக்கம் அரசாங்க அலுவலகங்களில் மேலதிகாரிகள் முதல் சில்லறை ஊழியர் வரை கோவைப்படுத்தப்பட்ட இயக்கமாக இருக்கிறதாம். இது முன்பு ஒரு பிரபல மேலதிகாரி நடத்திய இயக்கத்தைப் புதுப்பித்து நடத்தும் இயக்கமா என்று ஐயப்படப்படுகிறது. இந்த இயக்கத்துக்கு அன்று அவரோடு கூடி ஒத்துழைத்த சில பெரிய திணைக்களப் "பெரியார்கள்" ஒத்துழைப்பு அல்லது தலைமை நல்குவதாகத் தெரிகிறது.

இவற்றைத் தொழிற் சங்க ரீதியிலேயே தொழிற்படுத்துகிறார்களாம் வெளிப்புறத் தோற்றத்தில். அதே நேரத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் கண்காணிக்கப்படுகிறதா?

## மாவட்ட சபைகள்:

"மாவட்ட சபைகள் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமோ தமிழ் மக்களுக்கெனத் தனியாகவோ கொண்டுவரப்படவில்லை. நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி, மக்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு வழங்க, பழைய அந்நியராட்சிக்கால நிர்வாக முறையை மாற்றுவதற்கு நாடு முழுவதிலும் மாவட்ட சபைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

எனவே நாட்டின் நன்மைக்குரிய ஒரு நல்ல திட்டத்தை கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியொன்று அபாயச் சங்கு ஊதத் தொடங்கியுள்ளது போல, எதையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்போரும் கூட இதை வகுப்புவாதக் கண்கொண்டு நோக்குவது நாட்டுக்கு நன்மை பயக்காது."

— ஈழநாடு - 7. 9. 66.

"மாவட்ட சபைகள் விரைவில் வரத்தான் போகின்றனவென்றும், அவை ஜனநாயக ரீதியில் அமைக்கப்படவிருக்கின்றனவென்றும் உள்ளூராட்சி அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. ஆர். பிரேமதாசா நேற்று முன்தினம் மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார். இந்தச் செய்தி தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, ஜனநாயக ஆட்சிமுறை ஸ்தலஸ்தாபனங்களில் இருந்து வளர்ச்சியடைய வேண்டுமென விரும்பும் எல்லோருக்கும் திருப்தியை அளிப்பதாக இருக்க வேண்டும்."

— வீரகேசரி - 3.9.66.

## "மொழிபெயர்ப்பை யாரிடமாவது கேட்டு அறிந்து கொள்ளுங்கள்"

### "நான் தரப்போவதில்லை!"

**புகைவண்டித் திணைக்கள மேலாளர் கெடுபிடி!**
**சங்கத்தின் பலத்த கண்டனம்!**

(நமது நிருபர்)

எமது சங்கத்தின் உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்ட மாற்ற அறிவிப்புக் கடிதம் தனிச் சிங்களத்தில் இருந்ததால் அதற்குரிய மொழிபெயர்ப்பை அவ்வுறுப்பினர் கேட்டும் கொடுக்கவில்லை.

இதையொட்டி சங்கத்தின் முழு நேர அலுவலரான திரு. ஆ. தேவராசன் புகைவண்டித் திணைக்கள மேலாளரைச் சந்தித்துப் பேசியபோது மொழிபெயர்ப்புக் கொடுக்க மறுத்ததுடன் தேவையற்ற புண்படுத்தும் பதில்களையும் கொடுத்தாராம்.

"அந்தக் காலத்தில் ஒரு கடிதம் ஆங்கிலத்தில் வந்தால் அதைக் கிராமத்திலுள்ள யாரிடமாவது காட்டிச் சாரத்தை அறியவில்லையா? அப்படி யாரிடமாவது போய்க் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். நான் மொழிபெயர்ப்புத் தரப்போவதில்லை. நான் உம்முடன் ஆங்கிலத்தில் பேச மறுக்கலாம் என்பதை அறிவீரா? இன்று காலை தமிழில் தந்தி அனுப்பினீர்கள். அதைக் குப்பைப் பெட்டியில் போட்டிருக்க வேண்டும். இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. நான் மொழிபெயர்ப்புத் தரமாட்டேன். இது புகைவண்டித் திணைக்களம் என்பதை மறக்க வேண்டாம். இந்த மாதிரிக் கெடுபிடி செய்ய வேண்டாம். இப்போ எல்லாம் அமைதியாக வேலை செய்கிறோம். இதைக் கிளற வேண்டாம். 1958 இல் நடந்ததை வரவேற்கப் போகிறீர்களா?" என்று தேவையற்று உழறினாராம்.

4. 12. 66 இல் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் இவரின் குடியேற்ற ஆட்சிப் போக்குக்குப் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரத்தை இப்போது திறைசேரியும், போக்குவரத்து அமைச்சும் விசாரணை செய்து வருகின்றன.

## புதிய மொழிவழித் தொழிற் சங்க வரிசையில் காங்கேசன்துறை

### (1) துறைமுகத்தில்:-

காங்கேசன்துறைத் துறைமுகத் தொழிலாளர் சங்கம் ஒன்றை அங்கு வேலை செய்யும் வீரத் தமிழ் இளைஞர்கள் ஒன்று கூடி நிறுவியுள்ளனர். இந்தச் சங்கத்தின் தொடக்கவிழாவில் பருத்தித்துறை நா. உ. திரு. க. துரைரத்தினம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

### (2) சீமெந்தித் தொழிற் சாலையில்:-

காங்கேன் துறைச் சிமெந்தித் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் தமிழ் எழுதுவினைஞர்கள், தமக்கெனப் புறம்பான ஒரு சங்கம் அமைக்க முன்வந்துள்ளனர். இதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே அவர்கள் சேர்ந்திருந்த அகில இலங்கைச் சங்கத்திலிருந்து இவர்கள் வெளியேறிவிட்டார்கள். காரணம் இவர்கள் நலம் பேணப்படாதமையேயாம்.

"கழுதை மேய்பா ழாகினு மாகும்"